# முரசொலி

மு.கருணாநிதி

முரசு 1 | சென்னை | 18—3—55 | வெள்ளி | ஒலி 51


## கட்டாய ஓய்வு?




நாடக மேடை (மு. க.) (7-ம் பக்கம்)


# இலட்சிய தாகம் தணிக்க— இணைந்திடுவீர், எம்மோடு!

**அன்புள்ள குமார்,**

உன் கடிதத்தைக் கண்டதும் நான் திகைத்துவிட்டேன். உன்னைப்பற்றி — உன்னுடைய எழில்மிக்க வருங்காலத்தைப் பற்றி—எவ்வளவு ஆசைக் கனவுகளை எழுப்பியிருந்தேன்-தெரியுமா? நீ வளர்ந்து பெரிய மனிதனாய் — சர்வகலாசாலையின் பட்டிமண்டபங்களிலே, 'சர்' களைப்போல, சர்ச்சிலும் வெட்கித் தலைகுனியும் அளவுக்கு, தூய்மையான ஆங்கிலத்தில், புயல் நடையில், தந்துபி முழங்குபவனாயிற்றே, நீ!—நாளை பட்டம் பெற்று, ஐ. ஏ. எஸ். ஆகி, நீ ஒரு மாவட்டத்தின் கலெக்டராகவோ, அரசாங்கத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமான 'செகரட்டரி'யாகவோ ஆகலாம்;—முன்பு வெள்ளையன் ஆட்சிக காலத்தில் சுபாஷ் சந்திரரும், இன்று 'ராஷ்டிரபதி'யாய்த் துலங்கும் இராஜேந்திரரும் தாங்கள் பெற்ற பட்டங்களைக் கிழித்து குப்பைமேட்டிலே எறிந்துவிட்டு விடுதலைச் சேனையிலே சேர்ந்ததைப்போல, நாளை நானும், என் தலைவர்களும் திராவிட விடுதலைக் கிளர்ச்சியின் கடைசிக் கட்டத்தின்போது ஒரு வரிகொடா இயக்கமோ; அல்லது வடநாட்டுக் கொள்ளையருக்கு அடங்கி நடக்காத சட்டமறுப்பு இயக்கமோ நடத்துவோம்; அப்போது என் தலைவர் ஒரு அறிக்கைவிடுவார்; நீயும் வடநாட்டான் உனக்கு தந்த சன்னத்துகளைக் கொளுத்திவிட்டு, பதவியை உதறி எறிந்துவிட்டு, எங்கள் இயக்கத்தில் பங்கு பெறுவாய் — தாயக விடுதலை வரலாற்றில் இடம்பெறுவாய்-என்றெல்லாம் எண்ணி இறுமாந்திருந்தேன் — இன்றும்கூட அந்த நிலையை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். எங்கள் இலட்சியம் வீண்போகாது என்கிற நம்பிக்கைதான் என்னை அப்படியெல்லாம் எண்ணச் சொல்கிறது! உன் கடிதத்தைப் படித்ததும், எங்கள் கொள்கையை—நாட்டு விடுதலை வெறியை—நீ சுலபத்தில் ஒப்ப மாட்டாய் என்றே நான் நினைக்கவேண்டியிருக்கிறது.

இதுவும் ஒரு விதத்தில் எனக்கு மகிழ்ச்சியைத்தான் அளிக்கிறது. கண்டதும் அரும்பிவிடும் காதலைவிட, பல நாட்கள் ஆய்ந்து, தெளிந்து உருவாகும் காதல்தான் நெடு நாட்கள் நின்று பரிமள சுகந்தம் எழுப்புகிறது! ஆழக் குழி தோண்டி, கல்லையும், காங்கிரீட்டையும் கொட்டி எழுப்பப்படும் மாளிகைதான், ஒரே நாளில் ஆற்றுமணல் மீது கட்டி முடிக்கப்படும் மாளிகையை விட வலுவுள்ளதாய் அமைகிறது. அப்படி எழுப்பப்படும் மாளிகையை கொட்டும் மழையும், சுழன்றடிக்கும் சூறாவளியும் ஒன்றும் செய்ய முடிவதில்லை. பூமியையே உலுக்கும் பூகம்பம்கூட கடும் உழைப்பால் உருவான அந்த மாளிகையை சுலபத்தில் விழுங்க முடிவதில்லை.

அந்த மாளிகையின் நிலையிலேதான் நீயும் நாளை இருப்பாய். எப்படியும் உனக்கு எங்கள் இலட்சிய ஆடையை உடுத்திவிட முடியும் என்று என உள்ளத்திலே அசைக்க முடியாத நம்பிக்கையொன்று உருவாகிவிட்டது. பால்ய வயதிலே கேள்விகள் பலகேட்டு தெளிந்த அறிவுபெறும் குழந்தைகள் உலகமேதைகளாகத் திகழவில்லையா? அதைப்போலத்தான் இன்று உன் உள்ளத்திலே படிந்திருக்கும் மாசு மருக்களை நான் அகற்றிவிட்டேனானால், பின்னர் கொள்கைப் புடம்போட்ட பொன்னாகி விடுவாய் — எங்கள் இலட்சியம் காக்கும் இரத்தினமாகி விடுவாய்! படித்தவனல்லவா, நீ! அதனால்தான், பாதை நன்றாகக் கண்ணுக்குப் புலப்பட்ட பின்னரே பிரயாணம் செய்ய வேண்டும் என்ற பண்பினை வளர்த்திருக்கிறாய். வாழ்க அந்தப் பண்பு! இந்தப் பண்பு கொஞ்சம்கூட இல்லாமல்—சந்தேக விளக்கம் பெறும் கேள்விகளைக் கேட்காமல்—வெறும் விதண்டாவாதம் செய்யும் 'சின்னது'களை நினைக்கும் போதுதான் எனக்கு வேதனையாக இருக்கிறது! உம்; அது கிடக்கட்டும்.




கொள்கை விளக்கம்

உன்னுடைய கடிதத்தில் சமீபத்தில் பேரூரிலே கூடிய எங்கள் பொதுக் குழுவைப் பற்றிய சில சந்தேகங்களைக் கிளப்பியிருக்கிறாய்.

"யானை குட்டி போடப் போகிறது! அதிசயமான, அழகான குட்டி போடப் போகிறது — என்று ஆவலுடன் எதிர்பார்த்தார்கள், சிலர்! ஞாயிற்றுக்கிழமை பேரூரில் போட்டது என்ன? குட்டியல்ல"—என்றுகூட நீ கேலி செய்து எழுதியிருக்கிறாய்.

அது மட்டுமா? சமயம் நேர்ந்தால்-காமராசர் ஆட்சி கட்டாயப்படுத்தி நம்மை நெருக்கடிக்கு ஆளாக்கினால்—நாடகத் தடைச் சட்டத்தை எதிர்த்து கிளர்ச்சி நடத்துவது சம்பந்தமாக அதிகாரம் வழங்கும் பொறுப்பை பொதுச் செயலாளர் அவர்களிடம் தந்தது குறித்தும் நீ கேட்டிருக்கிறாய்; இதுதான் ஜனநாயகப் பண்பா; ஒரு தனி மனிதரிடம் அதிகாரத்தைக் கொடுக்கலாமா—என்றுகூட 'பொறுமி'யிருக்கிறாய்.

"பொதுச் செயலாளருக்கு முழு அதிகாரம் கொடுக்கிறது—என்ற தீர்மானம்! ஹய்! ஹய்!! அசல் ஜனநாயகம்! ராயபுரம் மாடல்!"—ஸ்பெஷல் நாடகம் பார்க்க, ஒரு புட்டி கள்ளச் சாராயத்துடன் தியேட்டருக்குள்ளே நுழையும் தரை மகாஜனத்தைவிட மட்டமான நடத்தையை விளக்குவதாயிருக்கிறது; உன்னுடைய வாசகங்கள்!

பி. ஏ. படித்து என்ன பயன்? அறிவு ஜோதிக்குப் பக்கத்திலிருக்கும் காரணத்தினாலேயே ஜானசூன்யங்களுக்கு பிரகாசம் கிடைத்துவிடுமா, என்ன? தெளிவு பெற்றோர் உலவும் இந்த நாட்டு அரசியலில்தான் உன்போன்ற தெளிவற்ற பன்னாடைகளும் உலவுகின்றன!

அன்புள்ள நண்பனே! வேகமாக எழுதிவிட்டேனே என்று கோபித்துக் கொள்ளாதே. நான் உன்னையிலேயே கேட்கிறேன்; நீ உன்னுடைய மாணவப் பருவத்தில் எப்போதாவது அமெரிக்க நாட்டு அரசியலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா? அதுவுமில்லாவிட்டால் செய்தித் தாள்களையாவது நீ ஒழுங்காகப் பார்ப்பதுண்டா? இதோ, ஜனவரி 26-ந்தேதி நடந்த முக்கியமான செய்தியொன்றை கீழே தந்திருக்கிறேன். கொஞ்சம் கவனமாகப் படித்துப் பார்!

'யு எஸ். சர்க்காருக்கு சட்டசபை அதிகாரம்'

"வாஷிங்டன், ஜன 26— பார்மோசாவையும், சியாங் வசமுள்ள மற்ற தீவுகளையும் சீன படையெடுப்பினின்று பாதுகாக்க அவசியமான எந்த ராணுவ நடவடிக்கைகளையும் ஜனாதிபதி ஐசனஹோவர் எடுத்துக் கொள்ள செனேட்டின் தீர்ப்புகள் அதிகாரமளித்துள்ளன."

—செய்தி முழுவதையும் படித்தாயா? அமெரிக்காவைப் பற்றிதான் உனக்குத் தெரியுமே! அது ஒரு முதலாளித்வ காட்டெருமை — போர் வெறி பிடித்த கொடும்புலி — என்றுதான் அமெரிக்காவைத் தூற்றலாமேயொழிய, அது ஜனநாயகத்தின் விரோதி என்று ரஷ்யன்கூட துணிந்து சொல்ல மாட்டான்! அப்படிச் சொன்னால், அதை உலக நாடுகள் ஒப்பாது என்பது அவனுக்குத் தெரியும். அரசியல் விற்பன்னர்கள் அமெரிக்காவை 'ஜனநாயகத்தின் தொட்டில்' என்றுகூட வர்ணித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அமெரிக்காவிலே தான் மக்களின் பிரதிநிதிகள் நிறைந்திருக்கும் கூடமாம் செனேட்சபை நெருக்கடி நேர்ந்தால், பார்மோசாவின் தற்காப்புக்குத் துணையாக சீனமீது விமான-கடற்படைத் தாக்குதலை நடத்த ஜனாதிபதிக்கு—ஐசன்ஹோவருக்கு அதிகாரமளித்திருக்கிறது!

அன்புள்ள குமார்! நீ நன்றாக உணரவேண்டும்-பொதுச்செயலாளராம் அண்ணாவுக்கு பேரூர் பொதுக்குழு தந்த அதிகாரம், அமெரிக்க செனேட் சபைஐசன்ஹோவருக்குத் தந்த அதிகாரத்தைப்போலத்தான்!

இந்த இடத்திலேதான் 'வெறும்பேச்சுக்காரர்கள்' ஒரு உண்மையைத் தெளியவேண்டும். இப்படி தரப்பட்டிருக்கும் அதிகாரம் ஹிட்லர் தானாகவே எடுத்துக்கொள்ளும் 'நாசிச'ச் செயல்போலல்ல! முன்பு இத்தாலியிலே அதிகாரங்களைப் பறித்துக்கொண்டானே முசோலினி, அந்த 'பாசிச வெறி' இங்கு கொஞ்சம்கூட கமழவில்லையென்பதை நீயே நிதானமாக யோசித்துப்பார்-புரிந்துவிடும்!

"அசல் ஜனநாயகம்; ராயபுரம் மாடல்!"—என்றல்லவா கேலி செய்கிறாய்! இப்போதா

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# தலையங்கம்

சென்னை 18—3—55 வெள்ளி

## "நமக்கு நாமே!"

மார்ச் 20-அண்மையில் வருகிறது. பேரூர் பொதுக்குழு தீர்மானித்தபடி, நாடெங்கும் நம்முடைய குறை தெரிவிக்கும் 5-ஆண்டுத் திட்டக் கண்டன நாள் நடத்தப்பட இருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு சில சூதமதியினர் வழக்கம்போல் விதண்டாவாதங்களைக் கிளப்பியிருக்கின்றனர். "5-ஆண்டுத் திட்டத்தில் தென்னகத்திற்கு ஏற்ற பங்கு அளிக்கப்பட்டுவிட்டால் நீங்கள் திராவிடநாட்டுப் பிரச்சினையை கைவிட்டு விடுவீர்களா ?"— என்று வசைபுராணத்துக்கு பாயிரம் படிக்கின்றனர், சிலர்.

5-ஆண்டுத் திட்டத்தில் பங்கு பெற்று விடுவதால் மட்டும் நம்முடைய பிரிவினைத்திட்டம் செத்துவிடாது. மார்ச் 20-ல் நாம் எழுப்பப் போகும் கண்டனக்குரலிலே, திராவிட நாட்டுப் பிரிவினை முழக்கமும் தழுவியபடிதான் இருக்கும். நாட்டு விடுதலை என்னும் பின்னணியோடுதான் தி. மு. கழகத்தின் ஒவ்வொரு செயலும் அமைகிறது. அந்த அடித்தளத்தை வைத்துத்தான் நாம், நம்முடைய இலட்சிய மாளிகையை எழுப்புகிறோம்.

இந்த நிலைமையை விளக்குவதற்காகத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் கோவை சிதம்பரம் பூங்காவிலே கீழ்க்கண்டவாறு கூறினார்கள்:

''இனி, வருங்காலத்தில், காங்கிரஸ், இப்போதுள்ள 'சோஷலிசம் மாதிரி' என்பதை விடுத்து, உண்மையான சோஷலிசத்தை ஏற்றுக் கொண்டு செயல்பட்டாலுங்கூட, நாம், திராவிடநாடு கோரிக்கையை விட்டுவிடுவோமா என்றால், நிச்சயம் விடமாட்டோம்''

'காங்கிரஸ் என்ன சொன்னாலும் நீர் ஏற்கமாட்டீர்'— என்று சொல்லி நம்மீது காய்ந்து விழுபவர்கள், அண்ணா அவர்கள் கூறியதை கூர்ந்து கவனிக்கவேண்டும். ரஷ்யாவிலும், சீனாவிலும் தான் கம்யூனிசம் வேரூன்றிவிட்டதே என்பதற்காக, இரண்டு அரசாங்கங்களும் ஒன்றாகிவிடவில்லை; உலகப் படத்திலே அந்த நாடுகள் இரண்டையும் பிரித்து நிற்கும் கோடுகள் அழித்தெழுதப்படவில்லை! தாயக விடுதலையை தன் உயிரினும் மேலாக நினைக்கும் எந்த ஒரு பிரஜையும், கொள்கைதான் ஒன்றாக இருக்கிறதே என்பதற்காக, நாட்டை வேறொருவன் கையில் கொடுத்துவிட ஒப்பமாட்டான்!

நம்முடைய விடுதலையையும், இன்று நாட்டிலே உருவாகிவரும் நிகழ்ச்சிகளையும் நினைக்கும்போது, அயர்லாந்தை—அது நடத்திய போராட்டத்தை நம்மால் மறக்க முடிவதில்லை. சீனா போன்ற கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு, முதலாளித்வ விலங்கொடித்த ரஷ்யா எப்படி நல்லதொரு வழிகாட்டியாக அமைந்திருக்கிறதோ, அதுபோலவே, 'ஒரே நாடு' என்னும் போலிப் பாசத்தால் மற்ற சிறு பூமிகளை வளைத்துவிட நினைக்கும் நாடுகளின் திமிர் அடக்குவதற்கு, அயர்லாந்தின் விடுதலைப் போராட்டம் உற்ற துணையாக இருக்கிறது; நம்முடைய பாதை தவறென்று இடித்துக் கூறுவோருக்கு, தக்கதொரு பாடம் சொல்வதாகவும் இருக்கிறது. இதோ; அந்த நாட்டு சரித்திர ஏடுகளைக் கொஞ்சம் புரட்டுவோம்;

"அயர்லந்தா?—இங்கிலாந்துக்கு மூலப் பொருள்களை விளைவிக்கும் கழனியல்லவா அது!"—என்று எதிரொலிக்கும் பழிச் சொற்களை அழித்தெழுத, எழுத்தாணியைத் தேடி அலைந்தது வாலிபப் பட்டாளம்!

ஆங்கிலேயரது சூழ்ச்சியால் அஸ்தனமாகிவிட்ட 'கேல்' மொழியை—கேட்பாரற்றுக் கிடந்த அவர்கள் தாய்மொழியை— மீண்டும் மக்களிடையே ஒளிவிடச் செய்ய அங்கே கதிரவன் உதயமானான்!

ஏடுகளிலே இலட்சிய முழக்கம்—வீடுகள் யாவும், பகைவரை அழிக்கும் பாடி வீடுகள்! மழலைகள்கூட தாங்கள் பிறந்த மண்ணுக்குச் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்தன.

'ஊன் மறந்தோம்—உயிர் மறந்தோம்! அன்னை நாடே! உன்னை அழித்திடும் கயவரின் கழுத்தறுக்காமல் உட்காரோம்; உடை மாற்றோம்'' என்று உறுதி மேற்கொண்டு, குருதி சிந்திட காளையர் கூட்டம் அணிவகுத்து நின்றது!

"இங்கிலாந்துக்கு இக்கட்டான நேரமே அயர்லாந்துக்கு ஏற்ற நேரம்"—என்று பழமொழி தயாரித்து; பகைவரின் மீது தாவிடத் துடித்தனர், அயர்—பூமியின் அன்புக் குழந்தைகள்!

''பூனைகளுக்கு நீதி வழங்க குரங்கு ஏன் வரவேண்டும்? புலிகளிடம் வரி வசூலிக்க எலிக் குஞ்சுகளா திட்டம் வகுப்பது! எங்களுக்கு சட்டம் வகுக்க இங்கிலாந்தின் பாராளுமன்றத்துக்கு எப்படிக் கிடைத்தது உரிமை?''—விடுதலை வெறி கொண்டோர் கேள்விக் குறிகளை அடுக்கினர்!

''பிச்சைக்காரர்களல்ல நாங்கள்; இங்கிலாந்திடம் அட்சய பாத்திரத்தை ஏந்தி நிற்பதற்கு? அவர்கள் மட்டுமென்ன பிறவிப் பிரபுக்களா? எங்களிடம் சுரண்டிய பொருளால்தானே அவர்கள் சுந்தர வாழ்வு நடத்துகிறார்கள்?''—வெம்பிய உள்ளங்கள் இப்படியெல்லாம் புலம்பின! தும்பறுத்த காளைபோல் 'அயர்' மக்கள் என்று தம்மீது பாய்வரோ என்று சிந்தை கலங்கியது இங்கிலாந்து!

அந்த நேரத்திலேதான் **ஆர்தர் கிரிப்பித்** என்னும் வாலிபன் தோன்றினான். **'ஷின்பேன்'** என்று வழங்கப்படும் கொள்கையை உருவாக்கினான். 'ஷின்பேன்' என்றால் 'நமக்கு நாமே' என்று பொருள்.

''நாம் விதை தூவுகிறோம். வெய்யிலில் வாடி பயிர் வளர்க்கிறோம். நாம் விளைவித்ததை நாம்தானே அறுக்க வேண்டும்? இதில் அவர்கள் ஏன் குறுக்கிட வேண்டும்?''—என்று இங்கிலாந்துக்கு எதிராக பிரச்சாரம் செய்தது 'ஷின்பேன்' இயக்கம்.

''நமக்கு நாமே''—நைந்துபோன அயர் மக்களுக்குக் கிடைத்த புதிய தத்துவம்!

''நாம் ஆண்டோம்; இடையிலே வீழ்ந்தோம்; இனியும் நாமே ஆள்வோம்!''—என்று, விடுதலைச் சங்கம் முழங்கும் வீர வார்த்தைகள்!

அடிமைப் பட்டோரின் இதயத்து அடித்தளம் அந்த வாசகத்தால் விம்முகிறது!

இரக்கமற்ற ஆதிக்க வெறியர்களால்—இலட்சியம் நசுக்க விரும்பும் சிலந்திப்பூச்சிகளால் — வாழ்விழந்தோர்; நாட்டு வளம் பறிகொடுத்தோர், அந்த வார்த்தைகளைக் கேட்கும்போது தங்களது இரத்த நாளங்கள் விரிவடையக் காண்கின்றனர்!

வடவரின் ஆணையால் வறண்ட பாலையாகிவிட்ட திராவிடத்தில் மட்டுமென்ன; செல்வத்துக்கா குறைச்சல்? நெய்வேலியிலே நிலக்கரி கிடைக்கிறது!

சேர்வராயன், மலைத் தொடரிலே **பாக்சைட் தாதுக்களும் இரும்பும்** கருவாக இருக்கின்றன!

சிட்டம்பூண்டியிலே **குரோமைட்** கிடைக்கிறது!

திருநெல்வேலிச் சீமையின் கடற்கரை மணலிலே **கார்னெட்** தாதுக்கள் கிடைக்கின்றன! **கிராபைட்** கிடைக்கிறது!

திருச்சி மாவட்டத்திலே மண் வெட்டும் இடமெல்லாம் **ஜிப்சமும், ஸ்டாரண்டியமும்** இறைந்து கிடக்கின்றன!

மதுரை மாவட்டத்திலே **லைம் ஸ்டோன்** இருக்கிறது!

திருச்சியிலே **பாஸ்பாடிக் நொடியூல்ஸ்** ஏராளமாகப் புதைந்து கிடக்கிறது!

இவையெல்லாம் இருந்தும் நாம் ஏழைகள்—அரைவயிற்றுக் கூழுக்கு வடக்கை எதிர்பார்த்து—ஏங்கி—நடுங்கி, நிற்கும் கோழைகள்!

மண்ணுள்ளே புதைந்து கிடக்கும் நம் செல்வத்தை—திராவிட மாதாவின் வயிற்றிலே இருக்கும் அந்தக் கருவூலத்தை — தோண்டி எடுக்க—புது வாழ்வு சேதுக்க—இன்னும் ஏன் முயற்சிகள் உருவாகவில்லை?

உருவாகாது, நண்பர்களே, உருவாகாது! வடவர் பூட்டிய தளை, உடையாதவரை முயற்சி உருவானாலும், அது நமக்கு சரியான பலனளிக்காது!

சேட்டுகளெல்லாம் மேட்டு நிலத்தில் வாழும்போது, இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நாம் பள்ளத்தாக்கில் வசிப்பது? பசிகாரராய் வாழ்வது!

இந்த ஏற்ற பேதத்தை உடைத்தெறியத்தான் விண்ணுயரக் கிளம்ப வேண்டும், **"நமக்கு நாமே!"**—என்கிற முழக்கம்!

அப்படி 'நமக்குள்ளதை நமக்காக்கிக் கொள்ளும்' முன்னர் கேடுமதியாளருக்கு—வடநாட்டுக் கழுகுகளுக்கு நாம் விடும் எச்சரிக்கைதான்—

**மார்ச் 20! 5-ஆண்டுத் திட்டக் கண்டன நாள்!**

தாழ்வு போக்க, வாழ்வில் உயர, "நமக்கு நாமே" காரிய மாற்றிக்கொள்ள இப்பொழுதே தயாராகிக் கொள்வோம்!

மார்ச் 20. அந்த இலட்சியத்தை அழுத்தமாகச் சொல்லட்டும்!

### ஆசிரியர் மு. க. உடல்நிலை

ஆசிரியர் மு. க. அவர்கள் எழும்பூர் மருத்துவமனையில் இருந்தபடிதான் இப்போது கண்ணுக்கு சிகிச்சை பெற்று வருகிறார்கள். இன்னும் ஒருவார காலத்துக்கு மருத்துவமனையில் தங்க வேண்டியிருக்குமென்று டாக்டர் கூறியுள்ளார்.

# ‘நகர்’ நாடாக இருக்கும்போது நாமும் ஏன் வாழக்கூடாது?

ஆண்டோரா—ஒரு அழகுத் திருநகரம்-அது, இன்று ஐரோப்பாவின் சின்னஞ்சிறு நாடாகக் காட்சி அளிக்கிறது.

800-பேர்தான் தலைநகரத்திலே வசிக்கிறார்கள். மொத்த ஜனத்தொகை 5,500-தான்! இருந்தபோதும் அவர்களுக்கென ஒரு பாராளுமன்றம் இருக்கிறது—காற்றிலேபறந்து சுதந்திர கானம் எழுப்பும் கொடி ஒன்றும் இருக்கிறது!

அங்கே வறுமை கிடையாது. அடிமைகள் இல்லை. அந்த நாட்டின் பரப்பு 560—சதுர கிலோ மீட்டர்தானே என்று எந்த ஏகாதிபத்யமும் அதன் மீது பாத்யதை கொண்டாடவில்லை.

பனிக்காலம் முடிவுக்கு வந்ததும் ஆண்டோரா நாட்டின் மக்கள் பிரதிநிதிகள் கூடுகிறார்கள். தங்கள் நாட்டைச் சார்ந்திருக்கும் முக்கிய பிரச்சினைகளை விவாதித்து விட்டு கலைந்து விடுகிறார்கள்!

பக்கத்திலே இமயமலை போன்ற பிரான்சு இருந்தும்—ஒரே நொடியில் இந்தக் கொழுந்து பூமியை கசக்கி எறியும் வல்லமை படைத்த ஸ்பெயின் இருந்தும்,—ஆண்டோரா சுதந்திரமாக வாழ்கிறது; நீலம், மஞ்சள், சிகப்பு—ஆகிய வர்ணம் கொண்ட அதன் இலட்சியக்கொடி சுதந்ரமாகத்தான் பறக்கிறது!

இன்னும் சொல்லப்போனால்-உலகப் படத்திலே அணுவினும் சிறியதாய் காட்சிதரும் ஆண்டோராவிலே செய்தித்தாள்கள் கிடையாது. தனக்கென்று சொந்தமான நாணயச் செலாவணியை ஏற்படுத்திக் கொள்ளும் அவசியம்கூட எழவில்லை. பிரெஞ்சு நாணயமும், ஸ்பானிய நாணயமும் தான் அங்கே நடமாடுகின்றன.

தபால் நிலையங்கள்கூட மூன்று இருக்கின்றன. ஒரு தபால்நிர்வாகத்தை பிரான்சும், மற்றொன்றை ஸ்பெயினும், மூன்றாவதை ஆண்டோராவும் நடத்தி வருகின்றன.

அங்கே போலீஸ் படை எப்படி அமைந்திருக்கிறது, தெரியுமா? அரசாங்கத்துப் பணத்தை விரயமாக்க, கடல் போன்று ஜவான்கள் தொகையில்லை.

ஏழே போலீஸ்காரர்கள் தான் அந்த எழில்மிக்க நாட்டின் அமைதியையும், ஒழுங்கையும் கண்போலக் காத்து வருகிறார்கள்.

தபால் தலைகளை விற்பதற்கு தனியாக போஸ்ட்-ஆபீஸ்கள் கிடையாது. அந்தந்தப் பகுதியின் புகையிலைக் கடைகள் தான் தபால் தலைகளை விற்பனை செய்கின்றன.

பனிக்காலங்களில் ஆண்டோராவிலே யாரும் நடமாட முடியாது. எனவே அந்த நாட்டு மக்கள் கோடைக் காலத்திலே சம்பாதித்த பொருளை, குளிர் காலத்திலே செலவு செய்து கொள்கிறார்கள்.

அங்கே பசியில்லை. பட்டினி பட்டாளங்கள் கிடையாது. ஆண்டோராவிலே அளிக்கப்படும் கல்வி ஐரோப்பாவிலேயே சிறந்த கல்வியாகும். ஒவ்வொரு குக்கிராமத்திலும் பிரெஞ்சுமொழி சொல்லித்தர ஒரு பள்ளியும், ஸ்பானிய மொழி கற்றுக்கொடுக்க ஒரு பள்ளியும் இருக்கின்றன.

இன்னொரு முக்கியமான செய்தி! அந்த நாட்டிலே ‘இரத்தமில்லாத புரட்சி’யொன்றும் நடைபெற்றிருக்கிறது. ஓட்டுரிமைக்காக, சுதந்தரமாக வாழும் அந்த சிற்றூர்வாசிகள் 1933-ம் ஆண்டில் புரட்சி நடத்தி வெற்றியும் அடைந்து விட்டார்கள்!

இலட்சக்கணக்கான மைல்கள் சுற்றளவுகொண்ட நாடுகள் வாழும் உலகத்திலே தான், 560 கிலோ மீட்டர் கொண்ட ஆண்டோராவும் தனித்து வாழ்கிறது!

அணுகுண்டும், ஹைட்ரஜன் குண்டும் நீதி வழங்க முற்பட்டிருக்கும் இந்த நேரத்திலே தான். ஏழே போலீஸ்காரர்களைக்கொண்ட நாடு உயிர் வாழ்கிறது!

ஒரே உலகம் பேசும் உத்தமர்கள் உலவும் உலகத்திலே தான், ஐரோப்பாவிலே உள்ள அந்த சிங்காரச் சிற்றூர் அவர்களைப் பார்த்து கேலிச் சிரிப்பு சிரிக்கிறது!

ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டதாம், அதன் வரலாறு!—இப்படிப் பேசி பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள், ஆண்டோரா வாழும் மக்கள்!

ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட நாடு சுதந்திரமாக வாழ்கிறது—மணிக்கொடி ஏற்றி, “பாரீர் எமது பழுதிலா வாழ்வை!” என்று பாரெல்லாம் பறைசாற்றுகிறது.

நாமோ கல்தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு பிறந்தவர்கள்; பெருவாழ்வு வாழ்ந்தவர்கள்! இமயமலை தோன்றிய (கி.மு. 20,000,000) காலம் முதற்கொண்டே வரலாறு பெற்றிருந்தோம் என்று பெருமை பேசிக்கொள்கிறோம். ஆனால் இன்று இந்த வரலாற்றிலே வடநாட்டு அடிமை எனும் கறை படியவைத்து வாழ்கிறோம்!

ஆண்டோராவுக்குள்ள மணிக்கொடி திராவிடத்திற்கேன் இல்லை? ‘நகரம்’ நாடாக இருக்கும்போது, நாம் மட்டும் ஏன் தனிநாடுகேட்கக்கூடாது?

வரலாறு படியாத வறட்டு மதியினரே! தனித்து வாழும் அவசியம் இல்லாதபோதும் கூட, நாடமைத்து வாழும் ஆண்டோராவைப் பாருங்கள்! நமக்கென ஒருநாடு தேவை என்னும் அவசியத்தை இப்போதாவது உணருங்கள்!

★

## ‘தினத்தந்தி’யாரின் ‘புனைசுருட்டு!’

### புதுவைச் செயலாளர் அறிவிப்பு.

புதுவை, மார்ச். 12— “தினத்தந்தி” (சென்னை 11—3—55 வெள்ளி) இதழின் முன் பக்கத்தில், ‘குபேர் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும்!’ என்ற தலைப்பில், புதுவை முதலியார் பேட்டைத் தி. மு. கழக திறப்பு விழாவில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பேசியுள்ளதாக வந்துள்ள செய்திகள் அனைத்தும் முற்றும் பொய்! “அச்செய்திகள், அங்கு பேசப்படாததும், எங்கள் நோக்கத்திற்கு மாறுபட்டதுமாகும்......

“6-3-55 மாலை, புதுவை ஒதியஞ்சாலைத் திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், ‘திராவிடம் ஏன் பிரியவேண்டும்?’ என்ற தலைப்பில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பேசுகையில், ‘வடநாட்டு ஏகாதிபத்திய ஆட்சி நம்மைவிட்டுத் தொலையவேண்டும்; திராவிடம் தனியாகப் பிரியவேண்டும்; அதை நாங்களே ஆளவேண்டும் என்றுகூட விரும்பவில்லை — தோழர் காமராசர் ஆளட்டும்—எங்கட்கு கவலையில்லை; இவ்வூர் சுப்பையா (கம்யூனிஸ்ட் கட்சி) ஆளட்டும்—நாங்கள் ஆட்சேபிக்கவில்லை; தோழர் குபேர்—இப்பொழுது இ. ஜி. பிள்ளை என்று பெயர் மாற்றியிருக்கிறாரே, அவர் ஆளட்டும்—எங்கட்குக் கவலையில்லை. ஆனால், வடவர் நம்மை ஆளக்கூடாது! கேவல்சிங் நம்மை ஆள்வது கேவலம்!” என்றார். இக் கருத்தைத்தான் ‘தினத்தந்தித்தனம்’ செய்திருக்கிறார்கள் போலும்!

“முதலியார் பேட்டை தி. மு. கழகம் அவ்வூர் மேயர் முயற்சியால் நடைபெற்றதென்பதும் சுத்தப் பொய்! மேயர் அவர்கள் முனிசிபாலிடி இடத்தில் கழகக் கொடி ஏற்ற இருந்ததையும் தடுத்துவிட்டவர். (உடன் லோக்கல் இடத்தில் அக்கொடி ஏற்றப்பட்டது.)

“இதனால், புதுவை பொதுமக்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வது யாதெனில், எங்கள் தி. மு. கழகம் தனித்து இயங்கக் கூடியது; பிறகட்சிகளின் தொடர்போ—கூட்டுறவோ பெற்றுத்தான் வளரவேண்டுமென்ற அவசியத்தில்லை. ஆகவே, ‘தினந்தந்தி’, ‘தினமணி’போன்ற, செய்திகளைத் திரித்தும், புனைந்தும் கூறும் பத்திரிகைச் செய்திகளைக் கண்டு யாரும் ஏமாற வேண்டாம் என தெரிவித்துக் கொள்கிறேன்.—

இவ்வாறு புதுவை தி. மு. கழகச் செயலாளர் தோழர் ச. சிவப்பிரகாசம் அறிவிப்பு விடுத்துள்ளார்.

‘முரசொலி’

சந்தா விபரம்

உள்நாடு-இலங்கை

ஆண்டு சந்தா 6-0-0
6—மாத சந்தா 3-8-0

வெளிநாடு

ஆண்டு சந்தா 7-0-0
ஆறுமாத சந்தா 4-0-0

மூன்று மாத சந்தா கிடையாது.

# பண்பு கெடுக்கும் 'பாரத வீரா'! படை வருமுன் பதுங்கிவிடு!

**Enrolling members to the Congress Party**

क्रमांक 72178

श्री सूरजपाल का इस पुनर्जीवित कराने का सदस्यता फार्म इस कार्यालय में रुपया ————

★ के साथ प्राप्तकर्ता श्री ———— ने जमा किया है। ★

प्राप्त राशि का ब्यौरा नीचे लिखा है:—
आना ४ चार प्रारम्भिक सदस्यता का चन्दा।
★ रुपया १) एक क्रियाशील सदस्यता का चन्दा। ★
रुपया १०) दस क्रियाशील सदस्यता का स्थायी कोष के लिये एकत्रित वार्षिक धन राशि। [illegible]

हस्ताक्षर [illegible]
मण्डल. जिला/शहर काँग्रेस कमेटी

तारीख [illegible] …… ………

கடல் அலைகள் எழும்; விழும். ஆனால் கடல் ஆண்டாண்டு காலமாக அப்படியேதான் இருக்கிறது.

அரசாங்கமும் அப்படித்தான். காளான்களைப்போல் கட்சிகள் தோன்றும்; சில நாட்கள் இருந்துவிட்டு பின் மரித்துவிடும். ஆனால் அவை ஆட்சி செய்கின்ற அரசாங்கம் இருக்கிறதே, அது அந்தக் கட்சிகளுடன் அழிந்து விடுவதில்லை. இதற்குக் காரணம், அரசாங்கம் மக்களுடையது. அதை மாற்றியமைக்கும் உரிமையும் அவர்களுக்குத்தான் சொந்தம்.

இந்த உண்மையை உலக நாடுகள் அனைத்தும் ஒப்புகின்றன. வரலாறு, இந்தத் தத்துவத்தை பொன்னெழுத்துக்களில் எழுதிக் காட்டுகிறது. ஆனால் இந்த நாட்டையாளும் காங்கிரஸ் நண்பர்கள் வரலாறு காட்டும் ஒளி காணமுடியாத குருடர்களாகிவிட்டனர்.

இதைத் தெளிவுபடுத்துவது போலத்தான் 2—3—55-ந் தேதிய 'கரண்ட்' இதழ் கீழ்க்கண்ட தகவலை வெளியிட்டிருக்கிறது.

இந்தப் படத்திலிருக்கும் சீட்டு உத்தர பிரதேசத்து காங்கிரஸ் அங்கத்தினர் ரசீது ஆகும். இந்த ரசீது சுராஜ் பால் என்னும் குடியானவர் பெயருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவரை அங்கத்தினராகப் பதிவு செய்திருக்கிறவர் நந்த் கிசோர் என்பவர்.

இந்தப் பெயர் கொண்டவர் உத்தர பிரதேச அரசாங்கத்தில் நல்ல பதவி வகிக்கிறார். வரி வசூலிக்கவும், விவசாயிகளிடமிருந்து நீர்த் தவணை பெறவும்-ஆகிய உரிமைகள் இவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இப்போது காங்கிரஸ் அங்கத்தினராகியிருக்கும் சுராஜ்பால், காங்கிரஸ் அரசாட்சிக்கு எதிர்ப்பான கருத்துகளை வெளியிட்டதாகவும், மேலும் அவர் ஏற்கனவே சரிவர வரி கொடுக்காத காரணத்தால், கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று எச்சரிக்கப்பட்டதாகவும், காங்கிரசின் நாலணா மெம்பராகிவிட்ட காரணத்தால் அந்த நெருக்கடியான நிலைமையிலிருந்து தப்பித்து விட்டதாகவும் 'கரண்ட்' நிருபருக்கு செய்தி கிடைத்திருக்கிறதாம்.

அரசாங்கத்தின் பொறுப்பான பதவி வகிக்கும் நந்த் கிசோர்தான் இந்த நடவடிக்கைக்குக் காரணமென்றால், இதுபோன்ற அநியாயங்களை நடக்க அனுமதிக்கலாமா என்று வினவுகிறார் 'கரண்ட்' ஆசிரியர்!

அரசாங்கத்தின் பெயரில் வரி வசூல் செய்ய வேண்டிய அதிகாரி, வரிக்கு பதிலாக நாலணா நாணயங்களை வசூலித்துக் கொண்டு, அவர்களை காங்கிரசில் சேர்ப்பதற்கு 'ஞானஸ்நானம்' செய்விக்கிறார்!

பொது மக்கள் ஊழியன் இப்படி ஒரு கட்சியின் முழுநேரத் தொண்டனாக மாறலாமா? இந்த அரசாங்கமென்ன, காங்கிரஸ்காரர்களின் பரம்பரைச் சொத்தா? அல்லது, கதர்க் குல்லாய் அணிந்தவர்கள்தான் அதன் வாரிசா?

நேருவின் சொந்த மாகாணமே இப்படி ஊழல் விளைவிக்கும் உதய சூரியனாகக் காட்சி தருகிறது.

வேண்டுமானால் நந்த் கிசோர் தன்னுடைய வீட்டிலே — தன் மனைவி மக்களை, உற்றார் உறவினரை, காங்கிரசில் சேர்க்கட்டும்— தனிப்பட்ட முறையில் 'தேசிய வீரனா'கத் திகழட்டும். கவலையில்லை, நமக்கு!

பொதுமக்கள் சேவகன் தன் கடமையை மறந்து ஒரு கட்சியின் வேலையை அரசாங்கப் பணியோடு மோதவிடலாமா?

அரசாங்கப் பணியிலிருப்பவன் எதிர்க்கட்சிக் கொள்கையின் அனுதாபியாக இருப்பது தெரிந்தால் அவன்மீது சீறி விழுபவர்கள்-வேலை நீக்கமென்றும், சம்பள வெட்டு என்றும் சொல்லி கொடுமை செய்பவர்கள்-இதுபோன்ற நந்த் கிசோர்களை நடமாட விடலாமா?

நல்ல பண்புகள் ஒரு நாட்டின் கண்கள்! வெள்ளைக்காரன் கற்றுக்கொடுத்த பண்புகள்தான் இன்றைய தினம் இந்த அளவுக்காவது நிர்வாகம் நடைபெற உதவுகிறது! ஒரு கட்சியின் தனிப்பட்ட நலத்துக்காக அதைப் பலிகொடுப்பவர்கள் நாட்டின் விரோதிகள்! மக்கள் துரோகிகள்!

இன்றைக்கில்லா விட்டாலும், என்றைக்காவது ஒருநாள் நல்ல பண்புகளை காவு கொடுக்க முன்வந்த காரணத்திற்காக இந்த 'தேசியத் திருவாளர்கள்' பதில் சொல்லித்தாளுக்வேண்டும்!

— மாறன். பி. ஏ. (ஆனர்ஸ்)

✱

## இலக்கியச் சந்தையிலே.....!

பழமொழிகள் நாட்டின் நிலையுணர்த்தும் கண்ணாடிகள்—அந்தந்தக் காலத்து மக்கள் தங்கள் மொழிகளுக்கு அணிவித்து மகிழும் பொன்னுடைகள்!

தமிழிலே ஒரு பழமொழியுண்டு! இடுக்கண் வரும்போது அல்லற்படும் நெஞ்சத்தை குறிப்பிட விரும்புபவர்கள்—"இருதலைக் கொள்ளி எறும்பு போல..." என்ற பழமொழியை உவமைக்கு அழைப்பார்கள். இந்த முதுமொழி எப்போது தோன்றியது தெரியுமா? அதற்கு எவ்வளவு வயது தெரியுமா? சங்க இலக்கியம் தொட்டு அந்த வாசகம் நடைமுறையில் உலவிவருகிறது.

இதோ, அந்தப் பழமொழியின் தோற்றுவாய்:

காதலன் ஒருவன் தன் உள்ளம் ஒட்டியவளைப் பிரிந்து, வாணிபம் காரணமாக வேற்றுநாடு செல்லவேண்டிய நிலை பிறக்கிறது. அவனைப் 'போ' என்று ஆணையிடுகிறது பொருள் தேட நினைக்கும் ஆண்மையுள்ளம்! அந்தப் பயணத்திற்கு வாழ்த்துக் கூறுகிறது கடமையுணர்ச்சி! காதல் நெஞ்சமோ, 'போகாதே!' என்று புலம்பி, வழியிலே நின்று தடைபுரிகிறது! என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளிக்கிறான் அந்தத் தமிழ்மகன்.

உடலுக்கு உயிர் அமைந்ததைப்போல் அவர்களை ஒன்றுசேர இணைத்துவிட்டது நட்பு; உயிருக்கு சுவை சேர்க்க, வந்து பொருந்திவிட்டது காதல்; இந்த நிலையிலிருந்து அவர்களைப் பிரித்திட நினைக்கும் தன்மை சாதல் போன்றதாயிற்றே—இதை அவள் அனுபவித்தறியாளே என்று கலங்குகிறான்!

இந்த நிலைமையைத்தான் நெடுந்தொகையில் புலவர் நரைமுடி நெட்டையார் 'இருதலைக் கொள்ளி எறும்பின் தன்மை' என்கிறார்.

...முற்பட
ஆள்வினைக்கு எழுந்த அசைவு இல் உள்ளத்து
ஆண்மை வாங்கக் காமம் தட்பக்
கவைபடு நெஞ்சம் கட்கண் அசைய
இருதலைக்கொள்ளி இடைநின்று வருந்தி
ஒருதலைப் படா அ உறவி போன்றனம்;
நோங்கோல் அளியல் தாமே யாக்கைக்கு
உயிர் இயைந்தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரியாளே.

(நெடுந்தொகை-339)
(உறவி-எறும்பு)

# செல்லாக் காசு!

அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த நான், கன்னத்தில் பட்ட குளிர்ச்சியினால் கண் விழித்த போது, விமலா ஒரு ரோஜா மலரை என் கன்னத்தில் வைத்துக் 'கிச்சு கிச்சு' மூட்டுவதைக் கண்டேன். அந்த அழகு ரோஜா இதழ் விரித்து சிரித்ததுப் போலவே, விமலாவும் தன் பவழ இதழ் திறந்து முல்லைப் பற்களைக் காட்டி — முறுவலித்துக் கொண்டிருந்தாள்.

'என்ன விமலா...தொல்லைப் படுத்துகிருய்? இன்னமும் விடியவே இல்லையே...'

கண்களை திறந்து பாருங்கள், கதிரவன் எங்கு வந்திருக்கிருன் என்று...இதோ சூடான காபி— என்று கூறியபடியே காப்பிக் கோப்பையை நீட்டினுள்.

காபியைக் கண்டதும் என் தூக்கம் எங்கேயோ ஓடிவிட்டது. அந்த சூடா சுவைநீரை. நான் பருகிய வண்ணமே அன்றைய பத்திரிகையைப் புரட்டினேன். முதல் பக்கத்திலேயே என் பார்வையை கவர்ந்தது இரண்டு செய்திகள். இந்தக் காலத்தில், கொலை, களவு, விபச்சாரச் செய்திகளைத்தானே செய்தித் தாள்கள் முந்தி தருகின்றன!

ஏர்க்காட்டில் இரண்டு தற்கொலைகள்! இளம் விதவை விஷ மருந்தி மாண்டாள்; இளைஞனொருவன் மரக்கிளையில் பிணமாகத் தொங்கினான். ஏர்காடு, மார்ச் 13. நேற்று இரவு இருவர் இங்கு தற்கொலை செய்து கொண்டனர். 'வசந்தம்' என்ற பங்களாவில் வாழ்ந்துவந்த அல்லி என்ற இளம் விதவை இரவு விஷமருந்தி தற்கொலை புரிந்து கொண்டாள். "நான் சமுதாயத்திலே ஒரு செல்லாக்காசு! கசங்கியமலர்! செல்லாக் காசும், கசங்கிய மலரும் யாருக்கு பயன்படப்போகிறது? மணம் வீசாத மலர்—செலாவணி ஆகாத காசு — பேசாத வீணை — இருந்து என்ன பயன்? ஆகவே என் வாழ்க்கையின் சோகக் கதைக்கு ஒரு கோப்பை விஷத்தினுல் முடிவுரை எழுதிவிட்டேன்"—என்று ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தாள், அந்த வசந்தத்தின் வானம்பாடி.

மரக்கிளையில் பிணமாக தொங்கிய அந்த இளைஞனின் பெயர் மூர்த்தி. 'துன்பக் கதைகள் சொல்லும் என் வாழ்க்கை ஏடுகளை இந்த முழ கயிற்றினுல் கட்டிவிட்டேன்' என்று ஒரு குறிப்பு எழுதி வைத்திருந்தான் அந்த பரிதாபத்துக்குரிய வாலிபன். இந்த இரண்டு செய்திகளை படித்தவுடன் என் சிந்தனை சிறகடித்து பறக்க ஆரம்பித்தது. தற்கொலை செய்துகொண்ட அந்த இருவரின் வாழ்வும் ஒன்ருேடு ஒன்ருகப் பின்னிக் கொண்டிருக்க வேண்டும் என்று என் மனம் சாட்சி கூறியது. துடித்துக் கொண்டு — கடிவாளம் இல்லா குதிரையைப் போல—ஓடியது என் சிந்தனை.

*  *  *

தபாற்காரன் விட்டெறிந்த கடிதத்தைப் பிரித்தேன். 'அன்புடையீர்' என்று ஆரம்பித்திருந்த அந்த நீண்ட கடிதத்தை யார் எழுதியிருப்பார்கள் என்று பக்கங்களை புரட்டினேன். துர்ப்பாக்கியன் மூர்த்தி—என்று இறுதியில் தீட்டியிருந்தது. விறு விறு என்று கடிதத்தை படிக்க முற்பட்டேன். இல்லை, இல்லை — ஒரு துர்பாக்கியனின் சோக வாழ்க்கையின் ஏடுகளைப் புரட்ட ஆரம்பித்தேன்.

*  *  *

அன்புடையீர்!

என்னை நீங்கள் மறந்திருக்கலாம். தினம், தினம் ஆயிரக்கணக்கான மக்களை சந்தித்துக் கொண்டிருக்கும் அரசியல் வாதியாகிய நீங்கள் என்னை நினைவில் வைத்திருக்க முடியாதுதான். சோலையூரில்—மாலை வேளையில் பள்ளி பருவத்தில் துள்ளி விளையாடிய உன் தோழர்களில் நானும் ஒருவன் என்பதை உனக்கு நினைவூட்டுகிறேன். அந்த இன்ப நாட்கள்...! துன்பத்தின் ஓரக் கோட்டில் நின்று— மரணத்தை இன்னமும் சில நிமிடங்களில் முத்தமிடப் போகும் நான் அந்த இன்ப நாட்களை நினைத்து—என் சோகக் கண்ணீரோடு ஆனந்தக் கண்ணீரையும் கலக்க விடுகிறேன். காலதேவன் எழுத வேண்டிய என் வாழ்க்கையின் முடிவுரையை நானே எழுதப் போகிறேன், சிறிது நேரத்தில். துர்நாற்றம் வீசும் இந்த சமுதாயத்தை; சாக்கடையை; தெளிந்த நீராக்க—மக்களுக்கு வாழ்வளிக்கும் புது வெள்ளமாக்க—நாளெல்லாம் உழைக்கும் நீ—சமுதாய சதியினுல் சீரழிக்கப்பட்ட என் வாழ்வை சிறிது கேள்! கற்பனை கதைகள் தீட்டும் உனக்கு இது ஒருவேளை பயன்படலாம் அல்லவா?

**முல்லை - சந்தி**

கல்லூரியில் நாம் இருவருமே ஒன்ருகத்தான் காலடி வைத்தோம். கல்லூரி பாடபுத்தகங்களை புரட்டுவதற்கு பதிலாக நீ பிரஞ்சு புரட்சியையும், ரஷ்ய இலக்கியத்தையும் புரட்ட ஆரம்பித்தாய். கனல் தெறிக்கும் உனது பிரசங்கத்தால் வெகு விரைவில் நீ கல்லூரி வாழ்வை துண்டித்துக் கொண்டு அரசியல் தொண்டனுக மாறிவிட்டாய். நாம் இருவருமே இரு துருவங்கள் ஆகிவிட்டோம். இரு துருவங்கள்—இரு முனைகள்— எங்கே சந்திக்கப்போகின்றன?

அல்லி! அழகின் எல்லை அவள்!

கல்லூரி நந்தவனத்தில் மண வீசிய சொகுசு முல்லை! மாண களின் கண்கள் எல்லாம் வட் மிட்ட வண்ண மலர்! தங்க அவளின் திருமேனி—மங்கா நில அவளின் முகம்—அதரங்கள் அழகு ரோஜா! அதில் தூங்கு பனித் துளிகள் அவளின் பற்கள் கன்னங்கள்—இன்ப ஏடு. மின் லைப் போல் ஒளி வீசும் விழிகள் பார்த்தோரை பரவசப்படுத் பளிங்குச் சிலை. என் உள்ளத் குடியேறிய கோமேதகச் சி என் சிந்தையைக் கவர்ந்த சிங்கா யின் உள்ளத்தைக் கொள் கொண்டது நானல்ல... சிங்க ரம்—சீமையூரின் இளைய ஜமீ தார். காதல் ஒரு சூதாட்ட அதில் சிலர்தான் வெற்றியடை கிருர்கள். பலர் தோல்வியைத்தா தழுவுகிருர்கள். அந்த பல நானும் ஒருவன். அல்லியின் அ பைப் பெற நான் எவ்வளவே முயன்றேன். ஆனுல் என்னை-இ ஏழையை-கண்ணெடுத்து பார்க் வும் மறுத்துவிட்டாள். பண திற்கும் படாடோபத்திற்கு பணிந்துவிட்டாள், அந்தப் பாவை பணத்தைக் கண்டுதானே பல் ளிக்கிறது, இந்த பரந்த வையகம் காதல் ஒரு தேன் மலர்! பண காரர்கள் அதை சுலபமாக வாங் விடுகிருர்கள். ஏழை பறிக்கு போது முள் குத்தத்தான் செ கிறது.

★

'அல்லி!என் இதயமே! இருண் என் வாழ்வுக்கு நீதான் ஒளி வீ வேண்டும்! உன்னை நினைத்து- நினைத்து, கண்ணீர் வடிக்கு என்னை உன் கணவனுக ஏற் கொள். வாழ்க்கைப் பட நாம் உல்லாசமாக செலுத் வோம்! என் உயிரே—உடைத் விடாதே என் ஆசையை!'

'மூர்த்தி! உண்மையிலேயே ப தாபப்படுகிறேன் உன் நி கண்டு. அல்லியின் உள்ளத்தி உனக்கு இடமில்லை. என் இத சிம்மாசனத்தில் சிங்காரத்திற் தான் இடமுண்டு...'

'அல்லி! என் கோமளவல்லி இல்லாத வாழ்வு எனக்கு வறண் பாலைவனம்தான். குளிர் நிலவே தளிர் மேனியாளே! என் வாழ்வு —தாழ்வும் உன் காலடியி கிடக்கிறது! ஏழை யென்று எ ணுதே ஏந்திழையே! நாம் இ வரும் வறுமையில்கூட இன்பமா வாழ்வோம். அழகு ரோஜ



மனையில்தான் மலரும் என்ப
| குடிசையில் கூடத்தான்
ம். மூர்த்தி! சிங்காரமும்
ம் மணம் முடித்துக் கொள்வ
முடிவு செய்துவிட்டோம்.
தொல்லைபடுத்தாதே.
ங்கு மண்டபமும்—கிளி
ஞ்சும் தோட்டங்களும்—
னத் தேடிவருகிறது...''

ன் சிந்தையை கவர்ந்த சிங்கா
ன் சிங்கார லீலைகள் உனக்
தெரியாது! மலருக்கு மலர்
ம் வண்டு அவன். மந்தியிடத்
லர் மாலை சிக்கி சீரழிவதா?'
ன் இன்னுயிரே! கன்னல்
யாளே! துன்பத்தை தேடி
தே. இதோ இன்பம் உன்னை
வருகிறது. சிங்காரத்தை
ந்தால் அவனின் படுக்கைய
துமையாகத்தான் இருப்பாய்.
வாழ்வு வானில் வட்டமிடும்
நிலவாக—என் இதய
த்திரமாக — ஏற்றுக்கொள்ள
இருக்கிறேன் கண்ணழகி!
ப்பாவையே! கற்பூர பெட்ட
நீ இல்லை என்ருல் என்
வு இல்லை! என்னை மணக்க
முத்தால், நான் மண்ணேடு
ஞக வேண்டியதுதான். என்
வை பாழ்படுத்திவிடாதே!
க்கிவிடாதே என் நம்பிக்
ய! காலமெல்லாம் உனக்
காத்திருப்பேன்...'

ர்த்தி! கட்டாயப்படுத்தி
வைப்பதல்ல காதல். தடி
ண்டு அடித்து கனியவைப்ப
காதல்...என் உள்ளத்தைக்
த சிங்காரத்தை குறை
தி! வறுமையிலே வாடும்
ன வ்லிய அழைக்கிறது.
மனை வாசமும்—அரசபோக
குட்டிச்சுவரிலே குமுறும்
கு எட்டடுக்கு மாளிகை
ப்போகிறது' உடைக்கும்—
வுக்கும் திண்டாடும் நான்
ாசபுரியின் சல்லாபம் செய்
பாக்கியம் கிடைப்பதை
த்தள்ள நான் என்ன உன்
ம் பிடித்தவளா? மூர்த்தி...
ன நீ வாழவிடு! என் பாதை
குறுக்கிடாதே! இந்த உல
இன்பத்தை அணு, அணுவாக
துப் பார்க்க விரும்பும்
ன தடுக்காதே! வண்டு
ர நாடி வரவில்லை—மலரே
டைத் தேடி ஓடுகிறது...'

நஞ்சத்தில் கொஞ்சமும்
கமின்றி பதிலளித்தாள் அந்த
சுகம்! அல்லி! தேனை உதறி
கானல் நீரை நம்பிப் போகி
ஆனல் என் இதயத்தில் என்
உன் சித்திரம் அழியாது என்
த்தினமே! உன் கண்
நீர் வழிந்தால் என் இத
ல் உதிரம் கொட்டும்'
ன் எவ்வளவுதான் கதறி
தும் என்ன பயன்? விரைவில்
ாரமும் அல்லியும் மணம்
துகொண்டனர். என்
தயிலிருந்த அந்த சிங்கார
வேறு ஒருவனுக்கு சொந்த
விட்டாள். அவளை — அந்த
நிலவை—என் அல்லியை
ல் மறக்கவே முடியவில்லை.
ப் பிணமானேன் நான்—
ாடிபோல ஊர் சுற்றினேன்.
கையின் எழிற் சித்திரங்
—காவியங்களின் அழகு
ங்களும் நெருப்பாகிவிட்ட
நெஞ்சுக்கு சாந்தி அளிக்க
வில்லை.

★

ழ்க்கை என்னும் மலரின்
களை விரிய வைத்துக்
ண்டே காலம் மெதுவாகப்
ச் சென்றது. நானும் நாட்

களை விரட்டிக் கொண்டிருந்தேன். ஒருநாள் அல்லியை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. 'மூர்த்தி! தேனை தேடிவந்த இடத்தில் தேள் கொட்டிவிட்டது...சிங்காரம் என்னை திரும்பிக்கூட பார்ப்பதில்லை. திகட்டிவிட்டது இந்த மலரின் தேன். புத்தம், புது மலர்களை நித்தம் நித்தம் ருசி பார்க்கும் வண்டு சிங்காரம்......தொட்டுத் தாலிக் கட்டிய கணவன் வருகைக்காக காத்து காத்து என் கண்கள் பூத்துப்போய் விட்டது! தென்றல் வீச வேண்டிய என் வாழ்வில் புயல் ஆதிக்கம் செலுத்துகிறது...பணத்திற்கும் பளிங்கு மண்டபத்திற்தும் என் இதயப் பசியை ஆற்றும் சக்தி ஏது?'— இப்படிச் சொல்லி கண்ணீர் விட்டாள், அவள்!

''அய்யோ! அல்லி! உன் வாழ்வு அஸ்தமித்துவிட்டதே!'' என்றலறினேன் நான். அல்லி விம்மி, விம்மி அழுதாள். அவளது கண்கள் குளத்திலிருந்து நீர் வடிய ஆரம்பித்தது. அவளது கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரை என் உதடுகளால் துடைக்க என் உள்ளம் தூண்டியது ஆனல் அவள் கழுத்திலே இருந்த தாலி—என்னை தடுத்தது! என் கண்களிலே நீர்—கண்ணீர்—இல்லை! இல்லை!! இதய வேதனையின் இரத்த துளிகள்!

வண்ண மலர்கள் பூத்துக்குலுங்கும் எழிற் சோலையையும்—பகலவன் ஒளிபட்டு பளபளவென்று ஒளி வீசும் பளிங்கு மண்டபத்தையும்—விட்டு விட்டு, எட்டா இடத்திற்கு ஓடிவிட்டான் சிங்காரம். ஒருநாள் காசையும், 'காச' நோயையும் அல்லிக்கு பரிசாக விட்டுவிட்டு எங்கேயோ ஓடிவிட்டான். அல்லி — அலறினள் — துவண்டாள். கண்ணீர் வடித்தாள். அவளின் உடைந்த உள்ளத்துக்கு ஆறுதல் கூறுவேன் நான். கால வெள்ளம் அவளது சோகச் சுமையையும் கொஞ்சம், கொஞ்சமாகக் குறைத்தது.

இன்னமும் மணம் வீசும் அந்த மலரை என் மனம் நாடியது. அல்லியை பலமுறை வேண்டினேன், ''உன்னை உலகறிய இல்லாளாக்கிக் கொள்கிறேன் அல்லி!'' என்று.


மூர்த்தி! உலகம் நம்மை ஏசும்—இந்த சமுதாயம் நம்மை வாழ விடாது! கைகொட்டி சிரிப்பர், மாற்றனின் மனைவியாகிய நான், உனக்கு வாழ்க்கைப் பட்டால், பொற்றலி என் கழுத்தில் மின்னும்போதே மறு மணம் செய்து கொள்ள சமுதாயம் இடந்தராது!

''பாழாய்ப் போன உன் வாழ்வைக் கண்டு யார் அனுதாபப் படுகிறர்கள்? சமுதாயம்—சூதர்களின் கோட்டை, வரட்டு வேதாந்திகளின் கூடாரம். மதவாதிகளின் கற்பனை மாளிகை! இந்த சமுதாயம்—சட்ட திட்டங்கள்—நம்மைக் கண்டு சிரித்தால் நாம் அதைப் பார்த்து சிரிப்போம். நல்லதோர் வீணையை புழுதியில் எரியும் நலங்கெட்ட சமுதாயத்திற்கு நாம் ஏன் அடிமை ஆக வேண்டும்?''

''மூர்த்தி, நாளை இரவு வா—நான் என் முடிவைச் சொல்கிறேன்...''

மறுநாள் இரவு அவளின் மாளிகையை நோக்கிச் சென்றேன். வெளியிலே இருந்த காவற்காரன் என் கையிலே ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அல்லியைப் பார்க்க வேண்டும் என்றேன்.

● தொடர்ச்சி 10-ம் பக்கம்



உறை புகு வேலை என் வாளுக்கில்லை யெனும் உரை தரு வீரன்—அவன் மடியிலே 'பொறைமலி பூங்கொம்போ' இவள் எனும் அழகுமிழ் ஆரணங்கு! தேனிசை! தென்பாங்கு! தென்றலுக்கு வாழ்த்து!

காற்றிலாடும் பசுங்கொடியோ! கற்பனை ஊற்றிலாடும் பைந்தொடியோ! மோவா அரும்பே! பூவார் சோலைப் புது மயிலோ! சிலம்பு குலுங்கிட—சிற்றிடை நடுங்கிட—செந்தமிழ்ப் பண்ணும், சிங்காரக் கண்ணும் தழுவிட, தழுவிட, அதைக் காண்போர்க்கு உறுதி நழுவிட, நழுவிட—ஆகா—ஆட்டமென்ன சொல்லுவேன்!

மணி முடிவேந்தர்—கனி மொழிக் கவிஞர்—ஆடலரசி—பாடும் சரசி—ஏழை—மோழை – எழில்மிகு மண்டபம்—தொழில் நிகழ் சாலை சோற்றுக் கலைவோர்—சொர்க்கம் தேடிகள்—விடுதலை விருத்தம்—தருதலை கீதம்—பள்ளுப் பறைகள்—பார்ப்பன குலத்தோர்—பலப்பல கண்டேன்! நாடகமேடை!

இத்தனையும் காட்டும் ஈடற்ற கலையே! நாடக மேடையே! நன்ருகச் சொன்னன்; நீயும் உலகமும் ஒன்றென்று! ஒப்புகிறேன், அதை நான்! ஆனலும் ஒன்றே யொன்று!

ஆண் பெண் சமத்துவத்தை நீ அணிமணிகளால் காட்டிவிடுகிருய். ஆணைப் பெண்ணகி! பெண்ணை ஆணகி! ஆணிலே பெண் பெண்ணிலே ஆண்! உடை மாற்றத்தாலேயே உன்னல் விரட்ட முடிகிறது அந்த பேசத்தை! ஆனல், உள்ள மாற்றத்தால் அந்த பேதத்தை ஓட்டிவிட முடியாமல் உலகம் எவ்வளவு பெரிய மூச்சு விடுகிறது பார்! ஆகவே நீயும் உலகமும் ஒன்றல்ல.

பறையரையும்—பார்ப்பனராய் ஆக்க முடியும் உன்னல்! பார்ப்பனத்தியையும், பறைச்சியாய் மாற்ற முடியும் உனக்கு!

அந்த சக்தியைப் பெற முடியாமல், சந்தியிலே நிற்கும் இந்த ஜெகமும் நீயும் ஒன்ரு? யார் சொன்னது!

தகுதியுடையோரைத்தான்—தார்புனையும் மன்னனய் வேடமணியச் செய்வாய் நீ! வேடமணியவே, நீ வேந்தனுக்குத் தகுதி பார்ப்பாய்! ஆனல் இந்த உலகம், அறிவு சூன்யங்களை-ஆவண மிலாறுகளை அரசு கட்டிலில் ஏற்றி அழகு பார்க்கிறது! எப்படி நீயும் உலகமும் ஒன்ருக முடியும்? ஆனல்-நாடக மேடையே! ஒரு விஷயத்தில் நீயும் உலகமும் ஒன்றுதான்!

கற்பனை வளமற்றவனெல்லாம் கவிஞனக வேடம் கட்ட நீ உரிமை அளிக்கிருய். தற்கால உலகமும் அந்த உரிமையைத் தாராளமாக அளிக்கிறது, சிலருக்கு!

ஆகையால்

நீயும் உலகமும் ஒன்றுதான்!

# சாவுக்குப் பின்னர்...?

செத்த பின்பு மனிதன் என்ன ஆகிறன்? அவனது சுந்தரமான உடலை தீ தின்றுவிடுகிறது. ஆனல்...இதுவரை அவனை ஆட்டிப்படைத்த அந்த "ஆத்மா"?...கண்முன்னர் தெரியும் வேறு பல பிரச்சினைகள் இருக்கும்போது பகுத்தறிவுவாதிக்கு கண்ணுக்குத் தெரியாத அதைப்பற்றியெல்லாம் ஏன் வீண் ஆராய்ச்சி?—என்று அதட்டிக் கேட்கிறர் டாக்டர் பராஞ்சிபை. "மரணத்திற்குப்பின் ஜீவன் எத்தோற்றத்தோடு இருக்கிறதென்பது விஞ்ஞான விற்பன்னராலேயே ஆராயத்தக்க விஷயம்" என்று அறுதியிட்டுக் கூறுகிறர், அவர்! விஞ்ஞானிகளாலேயே இன்னும் சரிவரப் புரிந்துகொள்ள முடியாத அந்த சாவுப்பிரச்சினையைப்பற்றி, ஆராய்ச்சிக் கருவிகளும், உலைக்கூடமும் இல்லாத நாம் ஏன் குழப்பிக்கொள்ள வேண்டும்?—டாக்டர் பராஞ்சிபை எழுப்பும் கேள்வி இதுதான்!

பூவுலக வாழ்க்கைக்கும், விண்ணுலக வாழ்க்கைக்கும் மத்தியில் ஏற்படும் மரணம் எனும் ஏதோ ஓர்வித நிகழ்ச்சியைப் பற்றிய கொள்கைகள்தான் மதத்தைப் பிரபலமாகப் போற்றும் மதவாதிகளின் மூலபலம் என்று கூறலாம்.

உயிரின் ஆதியையும் அந்தத்தையும் அறியவேண்டுமென்ற அவாவானது, எக்காலத்தும் ஒரே தன்மையில் இருத்தல் கவனித்தற்பாலது. விஞ்ஞான விற்பன்னர், ஏதோ ஒரு காரணத்திலாவது ஒரு பரம அணுவை, தாங்களாகவே சிருஷ்டித்தல் கூடும்; ஆனல் அதற்கு அறிவைப் புகட்டி பலவித மேலறிவுப் பிராணிகளாகத் தோற்றுவிக்க அவர்களால் முடியவும் முடியாது; முடியப்போவதும் இல்லை! "ஜடம்" என்ற அசேதனப் பொருளிலே "ஆத்மா" வெனும் சத்பொருள் ஒன்று அதற்கு அன்னியமாக இருக்கின்றதா இல்லையா என்பதைப் பற்றி நாம் இங்கு ஆராயப் புகவில்லை; எனினும் ஜடப்பொருள் இன்றேல் உயிரின் பலவித பரிணமிப்பை எவ்விதத்திலும் அறிந்துகொள்ளமுடியாது என்பது மாத்திரம் உண்மை. சரீர சாஸ்திர விற்பன்னர்களும், அறிவின் பலவித ஆற்றல்கள் மூளையிலிருக்கும் பல அணுக்களின் வெவ்வேறு வகையான சேர்க்கையினலேதான் ஏற்படுகின்றதெனக் கூறுகின்றனர். இதனல் ஜடபதார்த்தங்களின் மூலமாகத்தான் அறிவின் தன்மையை உணரவேண்டுமென்று தெரிகின்றது. எனவே சாதாரணமாக மனிதன் தனது வாணளில் உயிர் அல்லது ஆத்மாவைப்பற்றிப் பிரமாதமாக எண்ணமல், அது தனது புத்திக்கு எப்படி உணரப்படுகின்றதோ அவ்விதமே எங்குமுள்ளதாக நினைக்கவேண்டியதோடு, தன் அறிவு அவ்வப்போது எதைதை உணர்த்துகின்றதோ அதை அனுசரித்து வாழ்க்கையையும் நடத்தல் வேண்டும். மரணத்திற்குப்பின் ஜீவன் எத்தோற்றத்தோடு இருக்கின்றதென்பது விஞ்ஞான விற்பன்னராலேயே ஆராயத்தக்க விஷயமாகும். தற்சமயம் அவ்விஷயத்தைப்பற்றிய அத்தாட்சிகளை ஆத்மவாதிகள் எத்தனையோ சோதனைகளால் விளக்கமுற்பட்டும், அவற்றை அறிஞர் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலைமைக்கு வரவில்லை. எது எவ்வாறிருந்தபோதிலும் நிருமாணித்துக் காட்டமுடியாத-விஞ்ஞான ஆராய்ச்சி முறையில் சோதித்துத் தெளியப்படாத—ஏதோ ஓர் யுகத்தில், எவராலோ அவரவர்களுடைய உத்தேசத்திற்கும், மனப்பான்மைக்கும், பயத்திற்கும் தக்கபடியாக சொல்லப்பட்ட மேற்குறித்த மரண சம்பந்தமான கூற்றுக்களால் இந்த ஆத்மாவைப்பற்றிய விஷயத்தை முடிவுகட்டுதல் அறிவுடைமைக்கு அழகல்ல.

ஏற்கனவேயுள்ள மரணத்தைப்பற்றிய பீதியைப் பலவித மதங்கள், அவ்வவற்றின் பலவகையான மௌடீக சாஸ்திர சித்தாந்தங்களாலும், மூடத்தனமான எத்தனையோ வகையான சடங்குகளாலும் எவ்வளவோ மடங்கு அதிகமாக்கி வருகின்றன. நரகலோகங்களென்ன? ஆங்காங்கு நேரும் சித்ரவதைகளென்ன? இறந்த பின்னும் இவ்வுலகில் உள்ள ஆசாபாசங்களால் அவனது ஆத்மா துன்பமடைவதென்ன? இறந்து பிறத்தல், பிறந்து இறத்தல்களென்ன? சித்ரகுப்த எமதூத வேதனைகளென்ன? இன்னும் இவைபோன்ற எண்ணற்றஆபாச சித்தாந்தங்களே இப்போது மனித சமூகத்தைக் கணக்கற்ற கஷ்டங்களால் நெக்குவிட்டு நைந்துருகும்படியான பழக்கவழக்கங்களில் ஈடுபடுத்திப் பரிதவிக்கச் செய்து வருகின்றன.

உயிரிழந்த சரீரத்தைப் பல மதத்தினர் பற்பல விதங்களில் தகனம்செய்துவந்தபோதிலும், எல்லா மதத்தினரும் மாண்டோருக்குரிய ஈமக்கிரியைகளை சரிவரச் செய்தாலொழிய, அவர்களது ஆத்மா சாந்தமடையாதென்பதை ஒருங்கே ஒத்துக்கொண்டு அவ்வாறே நடந்து வருகின்றனர். மனிதன் இறந்த பின் அவனது ஆத்மா பிரிந்து மேலுலகம் செல்கின்றது என்ற கொள்கையினலேதான் சரீரத்தை அடக்கம் செய்யும் விதங்களில் பலவித விவகாரங்கள் கிறிஸ்துவ நாடுகளில் கிளம்பியிருக்கின்றன. உயிரோடிருக்கும் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க எத்தனையோ கோடி பொன் சமாதிகளிலும், இறந்தவர்களின் ஞாபகார்த்தமாகக்கட்டும் கோபுரங்களிலும் வீணைச் செலவிடப்பட்டு வருகின்றது. ஜனங்கள் குடியிருக்கவே இடம் கிடைக்காத ஊர்களிலும் சமாதிகளுக்காக எவ்வளவோ விஸ்தீரணமான இடங்கள் விடப்பட்டு வீணே கிடக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க ஏராளமான பணவிரயம் ஆவதோடு, அவ்வித மயானங்களால் மக்களின் ஆரோக்கியத்திற்கே கெடுதியும் ஏற்படுகின்றது. முகமதிய நாடுகளில் பிணங்களின்மேல் எத்தனையோ பெரிய சிங்காரமான கோரிகள் எழுப்பப்பட்டிருக்கின்றன; அவைகள் மிகத் தேர்ந்த சிற்பவேலைத் திறனைக் காண்பிப்பதாயினும், எத்தனை கோடி மக்களின் இரத்தத்தின் சத்தை வீணக்கியிருக்கின்றனவென்பது கவனிக்கத்தக்கதாகும். ஈஜிப்ட் தேசத்திலுள்ள சமாதிகள், கோபுரங்கள் முதலியவற்றை அமைக்க எத்தனை அடிமைகளின் நெற்றிக் கண்ணீர் நிலத்தில் பாய்ந்திருக்கவேண்டும்? ஈமச் சடங்குகள் செய்வதாலும், கருமாதி சமாராதனைக் கிரியாதிகள் நடத்துவதாலும் எத்தனை இந்தியக் குடும்பங்கள் குடிக்கக் கஞ்சியில்லாமல் அலைகின்றன? செத்தவர்களால் ஏற்படும் சகியாத் துயரத்தைவிட, அவர்களின் கருமாதிகளுக்காகக் கடன்பட்டுப் பின் உயிருள்ள அளவும் மீளாத் துன்பத்திலழுந்தும் துயரம் பெரிதாகத் தோன்றுகின்றது. ஹிந்துக்கள் செய்யும் கருமாதிச் சடங்குகளை நேரில் காணுதவர்களுக்கு அவைகளைப்பற்றி விரித்துக் கூறின் அது சிறிதும் நம்பத்தகாத ஆபாசமாகவே தோன்றும். பிணத்திற்குத் தீ மூட்டுவதற்கு முன், அதன் ஆத்மா கஷ்டமின்றிப் பிரிந்துபோக வேண்டிய வசதிகள் முதலில் செய்யப்படுகின்றன. ஆத்ம சாந்திக்காக வாய்க்கரிசி சமைத்துப் படைக்கப்படுகின்றன. தவிர "கோடி வஸ்திரம்" என்பதாக நல்லவஸ்திரமாவது, இல்லாவிடின் ஏதோ ஒரு புதிய மஞ்சள் துணியாவது அப்பிணத்திற்குக் கட்டப்படுகின்றது. மீண்ட ஆத்மாவிற்குப் பாலமுதளிக்கப் பசுக்களை கோதானமாகக் கொடுக்கப்படுகின்றது. ஆதியில் "சககமனம்" என்ற பெயரால் இறந்த கணவனேடு அவனது உயிருள்ள மனைவியையும், அவன் தனிமையைத் தீர்த்து அவனுக்கு எங்கும் சுகமளிக்குமாறு ஒருங்கே வைத்துக் கொளுத்தப்பட்டுச் சித்ரவதையும் செய்யப்பட்டது! தற்காலத்தில் ஆண் மக்களனைவரும் மீசையை எடுத்துவிடவேண்டும்! மனைவியர் தலை மொட்டையடிக்கப்பட வேண்டும்! அவ்வாறு செய்வதற்குக் காரணம் அவனது மனைவிமார் அழகைக் குறைத்துக் கற்புக்கு பங்கம் வராமற் காப்பதொன்று; இரண்டாவதாக அவனது ஆத்மா சிரமமன்னியில் சுவர்க்கலோகம் சேர்வதற்கு ஒரு மயிர்ஏணி ஏற்படுத்துவதற்கும் ஆம்!

அந்த ஜீவாத்மா சில நாட்கள் வரையிலும் பூமியில் சஞ்சரித்த முக்கியமான இடங்களுக்கு வந்து செல்கிறதாம்; அதன்நிமித்தம் பலவித படைப்புகள் போட்டு அதன் சாந்திக்காகபூஜைசெய்யவேண்டுமாம்! கருமாதி, வருஷாந்திர பூஜா காலங்களில் படைக்கப்படும் போஜனத்தின் ஒரு கைப்பிடிச் சாதத்தை காகம் சாப்பிட வேண்டியது அத்யாவசியம். அவ்வாறு அந்த நாளில் காகம், சாதம் எடுக்கத் தவறினல் அந்த ஜீவன் தன்னல் அனுபவிக்கக் கொடுத்துவைக்காத ஏதோ ஒன்றை நினைத்துத் துக்க சாகரத்தில் ஆழ்ந்து கிடப்பதாகவும் கருதப்படுகின்றது. உடனே அவனது சுற்றத்தினர் அவ்வித அபேக்ஷையென்னவென உத்தேசித்து அதனை நிறைவேற்றுவதாக நிருமாணித்தபடி அநேக மணிநேரம்

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

## ஒரே கேள்வி!

ஆச்சார்ய விநோபாவின் சொந்த ஊரான ககோடா கிராமத்தில் (கொலபா ஜில்லா) நிலம் இல்லாத ஆசாமி ஒரே ஒருவன் கூட இல்லை என்று சொல்லுகிருர்கள்.


"சரி; ஆனல் ஒவ்வொருவனிடமும் கலப்பை இருக்கிறதா?"

('சுதந்திரா'—எஸ்.ஆர்.)

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

இரண்டு கண்களும் இல்லை; பார்க்கவே முடியாது; படிக்கவும் முடியாது; ஆனால் உலகத்தின் நன்றிக்குப் பாத்திரமான பெரிய மேதை! ஹெலன் கெல்லர் என்ற பெயருடைய அந்த மாது சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தார். குருடு—செவிடு பள்ளிகளுக்குச் சென்றார்; குழந்தைகளுடன் பேசினார்; பழகினார்; கூடிக் குலாவினார்.

அந்த அம்மையின் உயர்வுக்குக் காரணம் என்ன? முயற்சிதான்! அப்படி முயற்சியால் முன்னுக்கு வந்த மற்றொரு மேதையின் கதையை இவ்வாரம் படியுங்கள். "தூ; உதவாக்கரை!" என்று வெறுத்து ஒதுக்கப்பட்ட அவன், எப்படி முன்னுக்கு வந்தான்? பெங்களூர்த் தம்பி செல்வராசன் எழுதியுள்ள அவனுடைய கதை தோல்வியைக்கண்டு முயற்சி இழப்போருக்கு நல்லபாடம்!




# முயற்சி செய்; முன்னுக்கு வா!

★

புரட்சிப் புத்தகம்!

இப்படி அழைக்கப்பட்ட புத்தகம் ஒன்று சமீபத்தில் லண்டன் நகரில் வெளியானது. ஒரே பரபரப்புடன்—விறுவிறுப்புடன் ஆயிரம் ஆயிரமாக விற்பனையானது. அந்தப் புத்தகத்தில் அப்படி என்னதான் புரட்சி? அதில் 'புரட்சி'யைப் பற்றி ஒரு எழுத்துகூட இல்லை. ஆனாலும்......அந்தப் புத்தகம் புரட்சிகரமானதுதான்! எப்படி என்கிறீர்களா? அது எழுதப்பட்ட விதம்! ஆமாம்; அம்முறை புரட்சிகரமானது; மிக மிகப் புதுமையானது; ரொம்ப ரொம்ப வியக்கத்தக்கது!

எனது இடது கால்!

இதுதான் அந்தப் புத்தகத்தின் பெயர். பெயரிலும் புரட்சி இல்லை! ஆனால் அதை எழுதிய கிரீஸ்டி பிரௌன்தான் புதுமையான மனிதர்; விந்தையான பிறவி!

★

வீட்டில் ஒரு மூலையில் சுருண்டு கிடந்தான் அந்தப் பையன். அவனைப் பார்த்தவர்கள் 'ஐயோ, பாவம்!' என்று வருந்தினர். அவனைப்பற்றிகேட்டவர்கள் "அப்பப்பா! இப்படியும் ஒரு பிறப்பா?' என்று பயந்தனர். ஏன் தெரியுமா? ஊராருடைய கவனத்தை இப்படிக் கவர்ந்த அந்தச் சிசு, ஒரு பரிதாபத்திற்குரியது. அவனால் நடக்க முடியாது! எதையாவது எடுக்க வேண்டுமென்றால் — சாப்பிட வேண்டுமென்றால் கைகள் இயங்காது! நினைத்ததைச் செய்யத்தான் முடியாதே—அதை மற்றவரிடம் சொல்லலாம் என்றாலோ அதுவும் முடியாது. உதடுகள் அசையும்; ஆனால் சப்தமே எழும்பாது! புரிகிறதா? அவன் நொண்டி—மொண்டி—ஊமை!

அப்பப்பா! இத்தனைக் கோளாறுகளுடன் அவன் எப்படித்தான் வாழமுடியும்?—என்று வருந்துகிறீர்கள் அல்லவா? இப்படித்தான் அன்று பிரௌனும் ஏங்கினான். அவன் கண்கள் வடித்த கண்ணீரைக் கண்டு ஊரார் கலங்கினர். புது முறை வைத்தியங்களைச் செய்து தோற்ற மருத்துவர்களும் வருந்தினர். எல்லோரையும்விட, அவனைப் பெற்ற அம்மாவோ விம்மி விம்மி அழுதார். நினைத்து நினைத்து 'கோ'வென்று அழுதார். என்ன பலன்? பிணத்தைப் போல உருண்டு கிடந்தான் பிரௌன்! கடைசியில் 'துரதிர்ஷ்டம்' என்றபட்டத்தைச்சூட்டி ஒதுக்கியே விட்டனர் ஊரார்!

ஆனால் அம்மாவின் மனம் கேட்குமா? "அழுது என்ன பலன்? வெறுப்புக்கு ஆளான என் செல்வத்தை வாழவே வைப்பேன்! வியக்கத்தக்க மனிதனாக்குவேன்!" என்று முடிவுசெய்தார். உறுதி ஏற்றார்! தாயின் உறுதி சாதிக்க முடியாததை உலகில் எதுதான் சாதிக்க முடியும்? உலக மகாவீரர்களின் கதைகளை எல்லாம் பிறப்பித்த இடம் தாயன்புதானே? தாய்ப் பால்தானே?

பிரௌனின் அம்மா முழு முயற்சி எடுத்தார். எப்போதும் மகனின் அருகிலேயே இருந்தார். அன்போடு வளர்த்தார்; அக்கரையோடு கவனித்தார். அவன் பக்கத்திலேயே உட்கார்ந்து படங்கள் போட்டுக்காட்டினார். எழுத்தறிவை ஊட்டினார்.

வளர்ந்து வந்தான் பிரௌன். அம்மா அவனது இடது காலை அப்படியும் இப்படியுமாக அசைத்து அசைத்து உயிரூட்டி வந்தார். கொஞ்ச நாட்களில் அந்தக்காலை அசைக்கமுடிந்தது. அம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சி! மறுபடியும் அவர் வேறு ஒரு முயற்சி செய்தார். கால் விரல்களுக்கிடையில் பேனாவைக் கொடுத்து எழுதிப் பழக்கினார். அந்த முயற்சியும் வெற்றியைத்தான் தந்தது. ஆறைப் பத்து ஆண்டுகள் இரவு பகலாக இத்தப் பழக்கத்தை செய்து வந்தார். கடைசியில் பிரௌன் எழுதினான், தன் காலின் உதவியால்!

அம்மா ஆனந்தக் கண்ணீர் விட்டார். அவன் கால்களுக்கு முத்தங்கள் கொடுத்தார். அம்மாவின் மகிழ்ச்சி கண்டு பிரௌன் மகிழ்ந்தான். ஆனால்......அதே சமயம் அதற்கென்று அவர் பட்ட சிரமத்தை—ஓயாத் தொல்லையை நினைத்தான். அவனுக்கு அழுகையே வந்துவிட்டது. உடனேதான் தனது கால்களின் உதவியால் 'எனது இடது கால்' என்ற அந்த புத்தகத்தை எழுதினான். அதில் அவன் வாழ்வுக்கு போராடிய அம்மாவைப் பற்றி நிறைய இருக்கிறது 'தாய்மையை வெல்லும் சக்தி உலகில் எதுவுமே இல்லை!'—என்றும் எழுதியிருக்கிறான்.

இந்தப் புரட்சிப் புத்தகத்தை எழுதிய பிரௌன் இன்று நாடறிந்த நாடகாசிரியர்களில் ஒருவன்!

உலகத்தின் கண்களுக்கு உபயோகமற்றவனாகப் பிறந்தான்—வேண்டாதவனாக வளர்ந்தான்—ஆனால், இன்றோ...'விந்தை மனிதன்' என்று அதே உலகம் அவனைப்போற்றுகிறது; புகழ்கிறது! ஏன்? எல்லாம் அந்த அசையாத உள்ளத்தின்—விடாமுயற்சியின் செயல்தான்!

★

தோல்விஎன்றதும்நம்மில் அநேகர் துவண்டு விடுகிறார்கள் அல்லவா, அவர்களை எல்லாம் இந்த பிரௌனின் கதை, 'முயற்சி செய்; முன்னுக்கு வா!' என்று அழைக்கிறது.

— சொர்ணம்

## சிறிய வயதில் பயில்வான்!

அந்த மைதானத்தின் முன் ஏகக் கூட்டம்! 'எள்போட்டால் எண்ணையாகும்' என்பார்களே, அப்படி! அங்கென்ன திருவிழாவா? அல்லது திருமணமா? இரண்டுமில்லை. அது ஒரு குத்துச் சண்டை மைதானம்!

அன்று அங்கு ஒரு பிரபல குத்துச் சண்டை—அமெரிக்காவின் இரண்டு பெரிய பயில்வான்களுக்கிடையே பெரிய போர்! கேட்க வேண்டுமா? கூட்டத்தில் ஒரே ஆரவாரம்—அமர்க்களம்! அந்தக் கூட்டத்தினிடையே ஒரு சிறுவனும் இருந்தான். அவன் கண்கள்தான் சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்தன. ஆனால் கால்களோ நிலை யில்லாமல் குதித்துக் கொண்டிருந்தன. கரங்களோ துடித்துக் கொண்டிருந்தன சண்டை போடுவதைப்போல. அந்தப் 'பெரிய மனிதனது' படபடப்பை—ஆர்வத்தைக் கண்டவர்கள் பரிகசித்தனர்.

சண்டை முடிந்தது. கடைசியில் 'ஜேக்' என்ற பயில்வான் வென்றான். அதுசமயம் அந்தசிறுவன் 'ஜேக்கை நான்வெல்வேன்' என்று கத்தினான். ஆனால் அதை யாருமே கவனிக்கவில்லை!

கூட்டம் கலைந்தது. சிறுவன் வீட்டுக்கு வந்தான். ஜேக்கைப் போல படம் ஒன்று எழுதினான். சண்டைக்கு தயாரானான். பாய்ந்தான்—குத்தினான்—எல்லாம் படத்தின் மேல்தான். இப்படிப் பழகிய அந்தப்பாலகனை நினைத்தால்சிரிப்புவருகிறதல்லவா? ஆனால் சிரிப்பை ஆச்சரியமாக மாற்றட்டுமா? அந்தச் சிறுவன் தான் ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு அதே 'ஜேக்' என்ற பயில்வானை வென்றான்-நிகரற்ற ஒரே குத்துச்சண்டை வீரனாகத் திகழ்ந்தான். அவன் பெயர்தான் ஜெக் டெம்ப்சே!

பெரிய மனிதர்கள்

## சாவுக்குப்......

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

காத்துச் சலிப்பார்கள். அப்பொழுதும் வராதிருப்பின் தர்ப்பைப் புல்லை முடிச்சுப் போட்டுக் காகமாகப் பாவித்து செய்து அந்தச் சாதத்தைத் தொட்டாகிலும் தங்கள் மூடமனதைத் தேற்றுவார்கள்! அவ்வித சாஸ்திரப் பிராயச்சித்தம் செய்த போதிலும் அவர்களது கோழை மனம் மாண்டவரின் ஜீவன் சாந்தமடையாததால் தங்களுக்கு என்னென்ன துன்பம் எப்படிஎப்படி வருமோவென, அந்தோ! ஏங்கிப் பரிதவிக்கும்.

கருமாதி கைங்கரியங்கள், உயிரிழந்த நாள்முதல் பன்னிரண்டு நாட்கள் வரை ஒவ்வொன்றாக நடைபெறும். முதல வருஷாந்திர நாளன்று மிக்க சிறப்பாகக் கொண்டாடப்படும்; அன்றையதினம் சுற்றத்தாரனைவருக்கும், மேலும் ஏராளமான பிராமணர்களுக்கும் போஜனம் அளிக்கப்படும் மகனுடன் இவ்வித வருஷாந்திர சிரார்த்தத்தை ஒவ்வோராண்டும் தவறாது நடத்தவேண்டும். அந்தக் குடும்பத்தினர் விவசாயிகளாக இருப்பின் இவ்வித திதி நாட்களில் அவர்களது கால்நடைகள் ஒன்றாகிலும் வேலைசெய்யக் கூடாது; ஏனெனில் மாண்டவனின் ஜீவன் அந்தப் பிராணிகள் ஏதாவதொன்றில் புனர்ஜனனமெடுத்திருக்கக் கூடுமன்றோ!

இவ்வித மௌடீகப்புராணக் கொள்கைகள் ஹிந்துமக்களிடத்தே மாத்திரம்தான் காணப்படுகின்றனவென்று நினைக்க வேண்டாம். அவைகள் மனித சமூகம் உள்ள இடங்களிலெல்லாம் பொதுவாகவே குடிகொண்டிருக்கின்றன; ஆனால் அவ்வோரிடங்களிலும் சடங்குகள் மாத்திரம் கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப வெவ்வேறு விதமாகக் கையாளப்படுகின்றன. 'பேய்ஸ்டன்' என்ற இங்கிலாந்தின் கடற்கரையிலிருந்த ஓர் ஊரில் வசித்து வந்த-சர்வகலாசாலையில் பட்டம் பெற்ற ஓர் மாது, தனது தாயின் சமாதிக்குத் தூபமிட்டு, அன்னம் படைத்த விஷயமாக நேர்ந்த ஒரு விவகாரம் நீதிமன்றம் வரை வந்த விஷயம் மிக்க ஆச்சரியமாகவே நமக்குப் புலப்படுகின்றது. சமாதியை அழிப்பதும், பிணத்தை அடக்கம் செய்யும் விஷயத்தில் பிறர் தலையிடுவதும் மிக்க துவேஷத்தை மூட்டுவதாக எல்லா ஜனசமூகங்களாலும் கருதிப் போற்றப்படுகின்றது. சென்ற ஜெர்மனி யுத்தத்தில், உயிரிழந்த மக்களின் உடலினின்று கொழுப்பை ஜெர்மனியர் சேகரித்தனர் என்பதாக யாரோ கட்டிவிட்டதாலே ஏற்பட்ட எதிர்ப்பே அவர்களின் அழிவிற்குப் பிரபல காரணமாக இருந்தது.

மாண்ட மக்களின் ஆத்மாக்களுக்காக மனிதர் மேற்கொள்ளும் சிரமத்தை, உயிருடன் இருக்கும் மக்களின் நன்மைக்காக உபயோகிப்பார்களெனில் ஜனசமூகம் எவ்வளவு முன்னேற்றமடைந்திருத்தல் கூடும் என்பதை யோசிப்பீர்களாக! ஒவ்வொரு மனிதனுடைய செயல்களும் அவை பிறர்பால் எத்தன்மையில் பிரயோஜனகரமாகப் பிரதிபலிக்கின்றதென்பதிலேயே வேரூன்றி நிலைபெறுகின்றன. ஒவ்வொருவரும் பகுத்தறிவுச் சுடரைக் கொளுத்தி, அதன் வெளிச்சத்தில் மரணத்தைப்பற்றி ஆராய்ந்து பார்ப்போமாயின் அதனைப் பற்றி மௌடீக நோக்கங்களெல்லாம் சூரியன் முன் பனிப்படலங்களே போல் பறந்தோடும்; அன்றியும் மதப் பித்தலாட்டங்களால் ஏற்பட்ட மரணத்தைப் பற்றிய பயப் பேய்மாய்ந்து, மாந்தர் மரணத்தைத் திரணமாகப் பாவித்து, ஆனந்த வாழ்வெய்துவர் என்பது திண்ணம். மாண்டவனுக்குக் கோடித் துணியையும், அறுவகையுண்டியையும் படைத்துப் புதைப்பதைக் காட்டிலும், அவைகளை மக்களுக்குக் கொடுப்பது பலவகையிலும் சிறந்ததாகும். சிற்ப வேலைப்பாடுகளமைந்த மசூதிகளையும், ஸ்தூபிகளையும் இவ்வுலக இன்பங்களை என்றும் வேண்டாத மாண்ட பிரேதங்களின் மேலமைத்து அழகு பார்ப்பதைவிட, ஏழைகளுக்கு உதவும்படி சத்திரம், சாவடிகளைக் கட்டுவித்தல் மிகவும் தகுதியான செய்கையாகும்.

இதனால் ஓர் பகுத்தறிவுவாதி என்பவன் மேலான இலட்சியங்களில்லாதவனென்று எண்ண வேண்டாம். அவனது இலட்சியங்களெல்லாம் நமது கண்முன் உயிருடன் நடமாடும் மக்களை மேலோங்கச் செய்வதிலேயே செலுத்தப்படுகின்றன. ஃ

## பொன்முடியின்......

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

வது புரிந்துகொள் – ராயபுரம் மாடல் ஜனநாயகப் பண்பாட்டில் அசல் 'அமெரிக்கன் மாடலைப்'போல; மக்கள் நலன் நாடும் விதத்திலோ இது 'ஒரிஜினல் ரஷ்யன் மாடல்'தான்!

கடைசியாக இன்னொன்று சொல்வேன்! இந்திய உபகண்டத்திலேயே இன்று ஜனநாயகக்கொடியை உயர்த்திப் பிடித்துக்கொண்டிருக்கும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான்! கம்யூனிஸ்ட்களுக்கு இருப்பதுபோல எங்களுடைய தலைமைக் கழகம் மாஸ்கோவில் இல்லை. ஜனநாயக முகமூடியணிந்து சர்வாதிகார தர்பார் நடத்தும் நேருவைப்போல் அல்ல, எங்கள் தலைவர்!

தென்னகத்தில் கூடத்தான் எவ்வளவோ 'சில்லறைக் கட்சிகள்' இருக்கின்றன—அவர்களிடத்திலே கேட்டுப் பாருங்கள்-பொதுக்குழு என்றால் என்ன பொருள் என்று! அர்த்தம் சொல்வதற்குள்ளாக அவர்கள் திணறிப் போய்விடுவார்கள்! ஏனெனில், அவர்கள் அந்த ஜனநாயகப் பதத்தை, ஒன்று எங்கள் பத்திரிகையிலே படித்துத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும் — அல்லது அந்த வார்த்தையைக் கடன் வாங்கி தங்களது கட்சி இயந்திரத்திலே சொருகிக் கொண்டிருக்க வேண்டும்!

போதுமா சந்தேகத்திற்கான விளக்கம்? தற்காலிகமாகவிடை பெறுகிறேன். அடுத்த கடிதத்தில் சந்திப்போம்.

அன்பு,
**பொன்முடி**

வருகிறது! வருகிறது!

தமிழ் நாட்டுத் தம்பி தங்கைகளின் அபிமானம் பெற்ற ஒரே ஒரு பத்திரிகை!

# சாக்லெட்

(மாதமிரு முறை)
1-4-55 ல வெளிவருகிறது

மர்மம்நிறைந்த புதுமுறைக் கதைகள்!
தேன் சொட்டும் தொடர் கதை...!
சுவைதரும் கட்டுரைகள்......விஞ்ஞான ஆராய்ச்சிகள்!
பிரபல நாட்டுத் தலைவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்!
கலைஞர்களின் பிரத்தியேகப் பேட்டி!
குலுங்கச் சிரிக்கவைக்கும் ஹாஸ்யப்பகுதி! விநோதச் செய்திகள்...! பயனுள்ள கேள்விகளுக்குச் சரியான என்பதில்!

இன்னும் பல பல!

சாக்லெட் ஒவ்வொரு இதழும் சிறந்த புகழடைந்த அறிஞர்களைக் கொண்டு தயாராகிறது.

மூவர்ண முகப்பு கொண்டது.

தனிப்பிரதி விலை 0-2-0

முன்பணம் கட்டும் ஏஜண்டுகள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

"சாக்லெட்"
119, பிராட்வே, சென்னை-1

## செல்லாக்......

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

நீங்கள் வந்தால் இந்தக்கடிதத்தை கொடுக்கச் சொன்னார்கள். யாரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டிருப்பதாக கூறினான். கடிதத்தைப் பிரித்தேன்.

என் அன்பே!

இதுவே உங்களை முதல் முறையாகவும்—இறுதியாகவும் 'அன்பே' என்றழைப்பது. இக்கடிதம் உங்கள் கையில் சேரும் முன்பு நான் நீங்கள் தொடர முடியாத இடத்திற்கு போயிருப்பேன்.

'என் வாழ்வைக் கெடுத்த சிங்காரம் எனக்கு காச நோயைக் கொடுத்துவிட்டு ஓடிவிட்டான். பத்தாயிர ரூபாய் ரொக்கத்தையும், இந்த மாளிகையையும் என்னிடம் ஒப்படைத்து "முடிந்தால் உயிர் வாழ முயற்சி செய்! நீ உடல் நலம்பெற்றதும் நான் உன்னைச் சந்திக்கிறேன்"—என்று பேசும் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டு அவன் ஓடிவிட்டான். அதற்குப் பின்னர் டாக்டர்களின் சிபார்சுப்படிதான் இப்போது நான் மலைவாசம் புரிகிறேன்.

"அன்புள்ள மூர்த்தி! இப்போது நான் ஒரு செல்லாக் காசு! இந்த செல்லாக் காசை செலவாணியாக்க மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். கசங்கிய மலரை விரும்புவனை பைத்தியக்காரன் என்று எள்ளி நகையாடும், இந்தப் பொல்லாத உலகம். அந்தப் பழிக்கு உன்னை ஆளாக்க என் உள்ளம் இடம் தரவில்லை. உன் வாழ்க்கையின் சுமையாக நான் இருக்க விரும்பவில்லை. நான் உயிரோடு இருக்கும் வரை என்னைதான் சுற்றி, சுற்றி வருவாய். என் மரணத்தால் புது வாழ்வு மலரட்டும் உனக்கு. உடைந்த வீணை எதற்கு? இன்ப நாதம் எழுப்பும் நல்லதோர் வீணையை தேடிக் கொள்ளுங்கள். உங்களின் நீங்கா அன்பை நினைத்த வண்ணம் உங்களிடமிருந்து—நான் விடை பெற்றுக் கொள்ளுகிறேன்—அபலை. அல்லி".

என் உள்ளம் சுக்கல், சுக்கலாகி விட்டது. தேன் நிலவை தேடிச் சென்ற எனக்கு தீயின் வெம்மை தான் கிடைத்தது. இனி எதற்கு நான் இந்த வையகத்தில் வாழ வேண்டும்? இரண்டு இளம் வானம்பாடிகளை வாழ விடாத—வாழ அனுமதிக்காத இந்த வையகத்தில் நான் ஏன் வாழவேண்டும்? யாருக்காக இத்தனை நாள் காத்திருந்தேனோ — அவளே போன பின் நான் எதற்காக வாழ வேண்டும். தற்கொலை—கோழையின் செயல் என்று நீ கூறுவாய். ஆனால் அணு, அணுவாக மடிந்து கொண்டிருப்பதைவிட, நொடியில் மரணத்தின் மடியை தஞ்சம் அடைவதில் என்ன தவறு? ஆகவே ஒரு முடி கயிற்றில் என் வாழ்வை முடித்துக் கொண்டேன்..."

* * *

"என்னங்க! காபியைக் குடித்துவிட்டு தூங்கறீங்களே! ஆபீசுக்கு நேரமாச்சு; குளிக்க வாங்க..." என்று கூறிய வண்ணம் விமலா என்னை எழுப்பினாள். எதிரிலே இருக்கும் விமலாவைக் கண்டு விழித்தேன். பக்கத்திலே பத்திரிகை பிரித்தபடியே கிடந்தது! "என்ன கனவு கண்டீர்களா?" என்றாள். ஆமாம்...என்று கூறியபடியே குளிக்கப் புறப்பட்டேன்.

★

ஈழத்திலிருந்து ஒரு குரல்

# "அண்ணா"

[ திங்களிதழ் ]

ஆசிரியர்கள் : கலாநேசன்–கதிரவன்
22, டைஸ் பிளேஸ், கொளும்பு-12.

முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் திராவிடமெங்கும் தேவை. உடன் எழுதுக.

விபரங்கட்கு ந. தர்மலிங்கம்,
டி. டி. பி. ரோடு, முத்துப்பேட்டை, தஞ்சை மாவட்டம்.

# மதச் சார்பற்ற அரசு! மதத் திருவிழாவிற்குப் பரிசு??

இந்திய உபகண்டம் மதங்களின் கூட்டு—அதிலே வாழ்வோர் மதச் சாக்கடையிலே நெளிந்து நிற்கும் புழுக்கள்—இந்த உண்மை தெரிந்திருந்தும் கூட பண்டிதரும். இந்நாட்டு அரசியலை நிர்ணயிக்க சபை அமைத்துக் கூடியோரும் இந்தியாவை மதச் சார்பற்ற அரசு' என்று பிரகடனப்படுத்தினர்கள்.

பாகிஸ்தான், தன்னை 'முஸ்லிம் அரசு' என்று சொல்லிப் பெருமைப்பட்டபோது, பண்டிதர் பகடி பேசினர்: 'பாகிஸ்தான் ஒரு நூற்றாண்டுக் காலம் பின்னேறிவிட்டது.'' என்று! அப்போதெல்லாம் முன்னேற்றப் புயல் வீச, வீச: புரட்சிக் கருத்துகளை தன் பேச்சின் மூலம் விளக்கிக் காட்டினர்: புது உலகம் விரும்பும் எண்ணங்களை எழுதிக் காட்டினர்!

அவரது ஆட்சியிலேதான் சில தினங்களுக்கு முன்னர் லால் பகதூர் சாஸ்திரியால் இந்த நிதி வருஷத்திற்கான 'பட்ஜெட்'டை சமர்ப்பித்திருக்கிருர்.

கோடிக் கணக்கில் லாபங்கள் குவிந்திருக்கின்றன் — மகிழ்ச்சிதான் நமக்கு' இந்திய அரசாங்கத்துக்கு வெள்ளைக்காரன் இந்த வருவாயையும் காட்டிக் கொடுக்காமல் கப்பலேறியிருந்தால், என்றைக்கோ தேசியவீரர்களின் நிர்வாக இயந்திரம் இயங்காமல் போயிருக்குமே—என்று நினைத்து புன்னகை பூக்கிறோம்' கொஞ்ச தூரம் பிரயாணம் செய்பவர்களைப் புண்படுத்தி, 300-கமலுக்குமேல் பிரயாணம் செய்பவர்களுக்கு சலுகை காட்டியுள்ளார் ஏழை-நடுத்தர வர்க்கத்தினரின் சுகதுக்கங்களிலே பங்கு பெறும் நமக்கெல்லாம் சாஸ்திரியாரின் இந்த முறை சஞ்சலத்தைக் கொடுத்தது.

சஞ்சலம் தருவது இது மட்டுமல்ல—சனைனிகளுக்கு சர்க்கரை போன்று இனிக்கும் ஒரு செயலுக்கும் வித்தூன்றுகிறது பண்டிதர் ஆட்சி! சாக்கடைக் கொள்கையிலே தேசிய வீரர்கள் மீண்டும் விழுந்து புரளப் போகிருர்களே-- பன்னீரென்று நினைத்து! அந்த அழுக்கு நீரிலே இந்த நாட்டை தள்ளப்போகிருர்களே—என்று நினைக்கும் போது, முற்போக்காளர்களின் உள்ளம் குமுறுகிறது.

ஆமாம்; தசரா பண்டிகைக்கும், தீபாவளிப் பண்டிகைக்கும் இந்திய ரெயில்வே சலுகை காட்டுமாம்; அன்றைய தினம் குறைந்த அளவு கட்டணமுள்ள 'டிக்கட்'களை வழங்குமாம்!

இந்துமத வெறியர்களாம், பித்துபிடித்தலையும் மகாசபைக்காரர்களல்ல, இப்போது ஆட்சியிலிருப்பது!

'மதச் சார்பற்ற அரசி'ற்கு எல்லா பாதுகாப்புகளையும் வாரி வழங்குவதாகப் பறைசாற்றும் பண்டிதர் ஆட்சியிலேதான், இந்த கோணல் சேஷ்டை நடந்திருக்கிறது!

இந்த உபகண்டத்திலே இந்துக்கள் மட்டுமா வசிக்கிருர்கள்? மதத் துறையிலே மைனாரிட்டிகளாயிருக்கும் முஸ்லிம்கள் எங்கே? கிறிஸ்துவர்கள் அழிந்தா போய்விட்டார்கள்? தங்களுக்கென தனி மதம் வகுத்துக்கொண்ட சீக்கியர்கள் என்ன ஆனர்கள்?—இந்து மதத்திற்கு மண்டியிடும் பண்டிதர் அரசைப் பார்த்து, இப்படியெல்லாம் கேள்விகள் பிறக்கின்றன?

கிருஸ்துமஸ் விழாவிற்கு காட்டப்படாத சலுகை தசராவுக்கு தரப்படுகிறது!

மீலாடி நபியன்று இல்லாத அனுகூலங்கள் தீபாவளியன்று பிரயாணம் செய்பவர்களுக்குக் கிடைக்கப்போகிறது!

வெட்கமாயிருக்கிறது, நமக்கெல்லாம்! வேதனை துளைக்கிறது வெளிநாட்டவரெல்லாம் கேலி செய்வரே, என்று நினைக்கும் போது! இதுதான், 'ஆசிய ஜோதி'யின் ஆட்சியாம்! மதச் சார்பற்ற அரசாம்! இந்த 'பத்தாம் பசலிக்காரர்கள்'தான் பாகிஸ்தான், பர்தாஸ்தானை றது என்று கேலி செய்துவிட்டார்கள்; கேவல கடத்தைக் காரர்கள்!

★

# சூடான வீணை; சுழலும் வாள்-வால்ட் விட்மன் கவிதைகள்!

அவனுக்கு பாதிரியைப் போல் நீண்ட தாடியுண்டு—ஆனல் அவன் 'பைபி'ளுக்கு பக்க மேளம் வாசித்தது கிடையாது!

அவன் அழுக்கடைந்த ஆடைகளைத்தான் அணிந்திருந்தான்!—ஆனல் அவன் உள்ளத்திலே அழுக்காறு கடுகளவும் இல்லை!

அவன் கண்கள் மோனக் கிணறுகள்! அவன் எழுத்துக்கள் எண்ணச் சோலைகள்! அவன் எண்ணங்களோ விலை மதிப்பில்லாத மாணிக்கங்கள்!

அவன்தான் புதுக்கவி வால்ட் விட்மன்!—அமெரிக்காவின் முதல் கவிஞன்—இலக்கிய உலகில் சிறப்பு பெற்று, சுதந்தரமாகப் பாடித் திரிந்த வானம்பாடி!

''புல்லிதழ்கள்''—என்னும் பெயர் கொண்ட கவிதைத் தொகுப்புதான், விட்மனுக்குப் புகழ் தேடித் தந்த புரட்சிக் காவியம்! அந்த நூலை அவனே அச்சுக் கோர்த்து, அவனே 'பாரம்' கட்டி, அவனே வெளியிட்டான்! அப்போது யாரும் அந்தப் புத்தகத்திற்கு வரவேற்பு கூறவில்லை. 'இந்தியன் பீரோ ஆபீசி'ல் அவன் பணியாற்றி வந்தபோது 'புல்லிதழ்களை' தன் மேஜை மீது வைத்திருந்ததற்காக மேலதிகாரிகள் அவனைக் கடிந்து கொண்டனர்! பின்பு, அந்தப் புத்தகத்தின் ஆசிரியன் அவனென்று தொரிந்ததும் வேலையிலிருந்தே அவனைத் துரத்திவிட்டனர்! அந்த நூலுக்கு ஒரே ஒரு ஆதரவாளர் இருந்தாரென்றல் அது எமர்சன் என்றுதான் சொல்ல வேண்டும்!

அன்று அவன் எழுதிய முதல் நாவலாம் ''பிராங்க்ளின் ஈவான்சை'' இலக்கிய மேதைகள் என்று சொல்லிக்



கொள்வோரெல்லாம் அலட்சியப்படுத்தினர்கள். இப்போதோ அதற்கு பொன்னைத்தான் பெறுமானமாகக் கூறுகின்றனர்!

சாகும்போதுதான் அந்த சுதந்தரக் கவிஞனை வையகம் உணர ஆரம்பித்தது. பக்கவாத நோயால் அவன் வருந்திக் கொண்டிருந்தபோது லண்டனிலுள்ள ஜில்க் ரிஸ்ட் என்னும் மங்கை நல்லாள் அமெரிக்காவிலுள்ள அவனுடைய வீட்டிற்கு வந்து சிகிச்சை செய்தாள். தன் அன்புக் கரங்களால் விட்மனைத் தொட்டு பணிவிடைகள் பல புரிந்தாள். ''விட்மன் கிழவனுகை மட்டும் இல்லாவிட்டால், நிச்சயம் அவரைத் திருமணம் செய்து கொள்வேன்''—என்று கூடக் கூறினளாம்.

சுந்தரமான கவிதைகள் பல சமைத்துக் கொடுத்த அந்த சுடர் விளக்கு விரைவில் அணைந்துவிட்டது. அவனுடைய 'புல்லிதழ்கள்' வெளி வந்து இந்த திங்களோடு ஒரு நூற்றாண்டு ஆகிறது. அமெரிக்கா முழுதும் அவன் நினைவை ஒரு பெரிய திருவிழாவைப் போல கொண்டாடுகிருர்கள்.

ஸ்வின்பர்ன் அவனது கவிதைகள், சூடான இசைக் கருவி! இடிக்குமாம் போன்ற எண்ணங்கள்! கூர்வாளைப் போல் மாந்தர் உள்ளங்களை ஊடுருவி, கவனத்தை இழுக்கும் உற்சாகப் பண்கள்'' என்று குறிப்பிடுகிருன்.

இதோ; உணர்ச்சி ஜொலிக்கும் அவனது கவிதை வரிகளில் சில.

''உள்ளதை வெளிப் படையாக சீர்-தளைகளுக்குக் கட்டுப்படாமல் தைரியமாகச் சொல்பவனே கவிஞன். அவன் எதுகைமோனையின்

தொடர்ச்சி 12-ம் பக்கம்

18.03.55

# கடைசிப் பக்கம்

குயுக்திசாமி பி. ஏ.
சிந்தாதிரிப்பேட்டை.

(?) அட்டை விடுகிறார்களே, அது கெட்ட இரத்தத்தை உறிஞ்சுவதற்கா?

**நீர் பி. ஏ. படித்திருந்தும் இந்த சாதாரண 'சயன்ஸ்'கூட தெரியவில்லையா? அட்டை நல்ல இரத்தத்தை உறிஞ்சாது என்று உமக்கு யார் சொன்னது? இரத்த ஓட்டத்தின் வேகத்தைக் குறைப்பதற்குத்தான் அட்டை விடுகிறார்கள்!**

ஒளிமணி, அளசந்தாபுரம்

(?) காமராசர் குடியாத்தம் தேர்தலில் தோல்வியடைந்திருந்தால்...?

**நிச்சயம் அவர் ஆச்சாரியாரைப் போல கொல்லைப்புறமாக சட்டசபைக்குள்ளே நுழைந்திருக்க மாட்டார்!**

வேந்தன்; திருவல்லிக்கேணி.
நடராசன்; திருச்சி.
மகராசன்; களக்காடு.

(?) மதுரையில் சில தோழர்கள் காங்கிரசுக்கு ஓடிவிட்டார்களாமே?

**ஆமாம்; சில 'துரோகி'கள் சரியான நடவடிக்கை எடுக்கப்போவது தெரிந்ததும் அப்படித்தான் ஓடிப்போகிறார்கள்!**

அ. அ. பரமசிவன்;
போடிநாயக்கனூர்.

(?) ஆச்சாரியார், ஏன் 'தான் சுயசரிதம் எழுத விரும்பவில்லை' என்று சொல்கிறார்?

**ஓநாய் சுயசரிதம் எழுதினால், இரத்தக்கறை படிந்த அந்த ஏடுகளை மான்குட்டிகள் படிக்க விரும்புமா? அதைப் போலத்தான்; ஆச்சாரியார் சுயசரிதம் எழுதினால் அதை இந்த நாட்டு மக்கள் படிக்க முன்வர மாட்டார்களே!**

அப்துல் ஹக்; வாணியம்பாடி

(?) நேருவைக் கொல்வதற்கு வெறியனொருவன் முயன்றிருக்கிறானே; அதுபற்றி நீர் வருத்தப்படுகிறீரா?

**அது குறித்துகூட நான் அவ்வளவு வருந்தவில்லை. அவரது உயிரைக் காப்பாற்றிய போலீசாரைப் பாராட்டாமல் ஆண்டவனைப் பாராட்டி சென்னை சட்டசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதல்லவா? அதை நினைத்துத்தான், நாடு இப்படியும் இருக்கிறதே என்று நான் அதிகமாக வருந்துகிறேன்.**

அழகப்டன்; புதூர்

(?) ஆச்சாரியாருக்கு ஏன் மீசையில்லை?

**அவருக்கு மட்டுமென்ன; அவர் வணங்கும் இராமனுக்கே மீசை கிடையாதே! அதனால்தான் அவரும் மீசை வைத்துக் கொள்ளவில்லை.**

சந்திரகாந்தன்; திருவனந்தை

(?) முன்பு நம்மையெல்லாம் அடிக்கடி திட்டிக்கொண்டிருந்த ராமசாமி படையாச்சி இப்போது ஏன் மௌனமாகிவிட்டார்?

அவருடைய வருங்காலமும் மௌனமாகி - அடங்கிவிட்டது தான் காரணம்!

பகவான்; சேலூர்

(?) நம் நாட்டில் இருப்பது போல சுயமரியாதைக்காரர்களும், பகுத்தறிவுவாதிகளும் மேல் நாடுகளில் இருக்கிறார்களா?

ஜாதி ஒழிப்பு போன்ற கொள்கைகள் மேலைநாடுகளில் இல்லை; காரணம், அங்கே ஜாதிகள் இல்லாததுதான்! அதைத் தவிர 'பகுத்தறிவுவாதிகள்' உலகெங்கும் இருக்கிறார்கள். சார்லஸ்பிராட்லா, இங்கர்சால் போன்றவர்கள்தான் 'பகுத்தறிவு இயக்க'த்தின் பரிதிகளாக இருந்திருக்கிறார்கள்! உதாரணத்துக்கு ஒன்று சொல்வேன். 'பிரெஞ்சுப் புரட்சி' சமயத்தில் பிரான்சில் கிறிஸ்து மதத்துக்கு விரோதமாக ஒரு பெரிய இயக்கம் தோன்றியது. 'கடவுள் வணக்கம்' வேண்டாம்; 'பகுத்தறிவு வணக்கம்'தான் தேவை என்றனர், அவர்கள்! நாடெங்கும் 'உண்மை'க்குக் கோவில் எழுப்பினர். 1793-ம் ஆண்டில் பாரிசிலுள்ள நாட்டர்டாம் ஆலயத்தில் 'சுதந்தரத்திற்கும், பகுத்தறிவிற்கும்' திருவிழா நடத்தினார்கள். அழகிய பெண்ணொருத்தி அந்த விழாவில் பகுத்தறிவை உருவகப்படுத்தி நின்றாள்!

தென்னன்; ஆரூர்

(?) நேரு போன்றவர்களால் புயல் வேகத்தில் பிரச்சாரம் செய்யப்பட்டுவரும் 'பாரத் சேவக் சமாஜத்'தைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

பொதுமக்களிடமிருந்துபிரிந்து, வெகுதூரம் சென்றுவிட்ட காங்கிரசை மீண்டும் மக்களோடு இணைக்க பாலம் அமைக்கிறார், பண்டிதர்! அந்த முயற்சியின் விளைவுதான் அந்த சமாஜம்! காங்கிரசின் நிழலாக நின்று பணிபுரியவும், அரசாங்கத் திட்டங்களுக்கு பிரச்சார பீரங்கியாக இருப்பதும்தான் அந்த சமாஜத்தின் வேலைத் திட்டம்!

தண்டபாணி; ராயப்பேட்டை

(?) உலகச் சரித்திரத்தின் துவக்கம் என்ன? முடிவு என்ன?

பூமி நெருப்புக் கோளமாக இருந்த நிலைமாறி, அதில் மனிதன் தோன்ற ஆரம்பித்ததிலிருந்து உலகச் சரித்திரத்தின் முதல் பக்கம் துவங்குகிறது. அநேகமாக மூன்றாவது உலக யுத்தமொன்று வந்தால், உலகச் சரித்திரத்தின் கடைசி அத்தியாயமும் எழுதப்பட்டுவிடும்!

(?) பட்டம் தாணுப்பிள்ளை பேசிய கூட்டமொன்றில் கலாட்டா ஏற்பட்டதாமே?

ஆமாம்; அப்படித்தான் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. மண்டைக் கனம் பிடித்தவர்கள் 'மாஜி'களாக நேர்ந்தால், சில சமயம் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களையெல்லாம் சந்திக்க வேண்டியதாகத்தான் இருக்கிறது!

## தூடான வீணை......

★11-ம் பக்கத் தொடர்ச்சி

அடிமையல்லன். சொல்லிற்கும், யாப்பிற்கும், இலக்கணத்திற்கும்கூட அவன் அடிமையல்லன். அவன் அவற்றின் தலைவன்! கருத்தின் முதல்வன்! அவன் ஒரு சிருஷ்டி கர்த்தா! அவன் மகாகவி!

"எதைப் பற்றியும் தன் கருத்தை, தனக்கே உரிய மொழியில் வெளியிட அவனுக்கு உரிமையுண்டு!

"உண்மைக் கவி பழைய வழக்கத்தின் பின்பாட்டுக்காரனல்ல!"

★

## கொள்கை வளருது கோபுரம் போலே!

**குடியேற்றம்**
**20-3-55**

பேசுவோர்:
எம். எஸ். இராமசாமி
கு. சி. பொன்னுசாமி

★

**போளூர்**
20-3-55 பழைய பஸ் நிலையம்
பேசுவோர்:
ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.
கருத்தோவியன்

★

**திருச்சி**
**20-3-55** (டவுன் ஹால் முன்பு)
பேசுவோர்:
என். வி. நடராசன்
என். எஸ். இளங்கோ
ஐ. எம். ஷெரீப்
என். ஜி. கிருட்டினன்

★

**மதுரை**
20—3—55 திலகர் திடல்
பேசுபவர்:
ஈ. வி. கே. சம்பத்
எஸ். அப்பாவு
எஸ். முத்து

★

**கம்பம்**
23—3—55
பேசுபவர்.
ஈ. வி. கே. சம்பத்
கே. ஏ. கலையழகன்

★

**திருவனந்தபுரம்**
**தி. மு. க. தோழர்கட்கு**

வருகிற 20-3-55ம் நாள் ஞாயிறன்று மாலை 5-மணிக்கு கழக காரியாலயத்தில் கழக அங்கத்தினர் கூட்டம் நடைபெறும். கூட்டத்திற்கு அங்கத்தினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன். —செயலாளர்.


## 'முரசொலி' வழங்கும்

★ அடுத்த வார "முரசொலி" அஞ்சா நெஞ்சனின் நினைவு இதழாக மலர இருக்கிறது!

★ வண்ண ஓவியங்கள் உண்டு! இலட்சிய விளக்கம் உண்டு! வழக்கம்போல் நீங்கள் 'முரசொலி'யிடமிருந்து எதிர்பார்க்கும் எல்லாச் சிறப்புகளும் உண்டு!

**16-பக்கங்கள் — விலை 0-2-6**

அதிகமான பிரதிகள் விரும்பும் விற்பனையாளர்கள் 20—3—55-க்குள் அலுவலகத்திற்கு தெரிவிக்கவும்.